# நப்பாசை

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55. வெங்கட நாராயணா ரோடு
தி.நகர். சென்னை-600017.

முதற்பதிப்பு : ஏப்ரல் 1994
உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 12-00

19527
3585418
3585418

அச்சிட்டோர்:
யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

19527
3585418

# நப்பாசை

## 1

வண்டியை நோக்கி நடந்த வரதன் நின்றான். பின்னோடு வந்து கொண்டிருந்த ரகுபதியிடம் ''தலை வலிக்குது. ஒரு டீ சாப்டுட்டுப் போகலாமாய்யா?'' என்று கேட்டுவிட்டு, காம்பௌண்டை ஒட்டி இருந்த நாயர் கடையைப் பார்க்க வலது பக்கம் திரும்பினான்.

வரதன் கேள்வி கேட்பது சும்மா ஒப்புக்காகத்தான்: தன் பதிலுக்குக் காத்திருக்க மாட்டான் என்பது ரகுபதிக்குத் தெரியும். சில நொடிகள் தாமதித்து நண்பனை பின் தொடர்ந்தபோது 'ச்சே' என்று எரிச்சலுடன் அலுத்துக் கொள்ளத் தோன்றியது

பின்னே? அலுவலகம் காலியாகி விட்டது கூட புரியாமல் மானேஜர் கூப்பிட்டார் என்று அவரோடு ஜாலியாக அரட்டை அடித்துவிட்டு வரதன் வெளியே வந்தபோது மணி ஆறாகி விட்டது. இனி, நாயர் கடையில் 'டீ செஷன்' என்றால் குறைந்தபட்சம் அதற்கொரு பதினைந்து நிமிஷங்கள். அப்புறம் புறப்பட்டு, சாயங்கால போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டு ஊர்ந்து, நகர்ந்து பாலவாக்கத்தை அடைவதற்குள் உன்பாடு என்பாடு என்று ஏழாகிவிடும். இன்னிக்கு வெள்ளிக்

கிழமை, சீக்கிரமா வந்திடுங்க, மருந்தீஸ்வரர் கோயிலுக்குப் போகணும்' என்று வாசல்வரை வந்து சொல்லியனுப்பிய மனைவி தங்கம் அங்கே காத்திருக்கையில் இங்கே வரதன், 'டீ சாப்பிடலாமா?', 'சிகரெட் பிடிக்கலாமா?' என்று நேரத்தைக் கடத்தினால் எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

போன வாரமும் இப்படித்தான். தங்கத்தின் அண்ணன்காரன் சோமசுந்தரம் சேலத்திலிருந்து ஒரே ஒரு நாள் தங்கிவிட்டுப் போக வந்திருந்தான். காலையில் வந்தவனிடம் சரியாக உட்கார்ந்து கூட பேசாமல் அலுவலகத்துக்கு வந்தாயிற்று. சரி, மாலையில் பொழுதோடு திரும்பி நிதானமாய் பேசி, சாப்பிட்டு சமாதானப்படுத்திவிடலாம் என்று தீர்மானித்தது நடக்க இயலாமல் மவுண்ட் ரோடுல ஒரு வேலை இருக்குய்யா...முடிச்சிட்டுப் போயிடலாம், என்ற வரதன், இவனை ஸ்கூட்டர் பின் ஸீட்டில் உட்கார வைத்தவாறே இங்கு, அங்கு அலைந்து தன் காரியத்தை முடித்துக்கொண்டு வீட்டில் இறக்கிவிடும் போது மணி எட்டைத் தாண்டிவிட்டது! இப்படி ஒரு தரம், இரண்டு தரம் என்றில்லை, எத்தனையோ முறைகள் நடந்தாயிற்று.

'போய்யா, உன்னோடு தினமும் இது ஒரு ரோதனையாகப் போய்விட்டது. இனி நான் பஸ்ஸிலேயே போய் வந்துகொள்கிறேன், உன் ஸ்கூட்டர் சவாரி வேண்டாம்' என்று ரோஷத்துடன் மறுத்துவிடலாம் என்றால், அதற்கும் மனசு வர மாட்டேன் என்கிறது இவர்கள் வசிப்பது திருவான்மியூரையும் தாண்டி பாலவாக்கத்தில்... ஆபீஸ் கோபாலபுரத்தில்...அங்கிருந்து இங்கு நேர் பஸ் கிடையாது. வீட்டிலிருந்து லொங்கு லொங்கு என்று முக்கால் கிலோ மீட்டர் போல நடந்து, அத்திப்பூத்த மாதிரி வருகிற பஸ்ஸில் ஏறி அடையாறு டெர்மினஸுக்கு வந்து, அங்கு இன்னொரு பஸ் பிடித்து கோபாலபுரத்துக்குப் போய், மறுபடி பத்து நிமிஷம் வேகமாய் நடந்தால்தான் அலுவலகத்தை அடைய முடியும். இதோடு பத்து மணிக்கு ஆபீஸில் இருப்பதற்கு எட்டு மணிக்கே வீட்டை விட்டு சோற்று மூட்டையும் கையுமாய் புறப்பட வேண்டிய நிர்பந்தம் வேறு. காலையில் இத்தனை அவஸ்தை என்றால், மாலையில் கேட்கவே வேண்டாம். ஆபீஸ் விட்டு திரும்பும் வேகத்தில், நெரிசலில் படிக்கட்டில் தொங்கிக்கொண்டு, எந்த நிமிஷம் உசிருக்கு ஆபத்து வருமோ என்று நடுங்குவதும் சேர்ந்துகொள்ளும்.



இத்தனை இடர்பாடுகளையும் தவிர்க்கத்தானே, என்னய்யா, இப்படி செஞ்சா என்ன? நீயும் நானும் ஒரே இடத்துல குடியிருக்கோம். ஒரே ஆபீஸ்ல வேலை பாக்கறோம் என்னண்டை ஸ்கூட்டர் இருக்கு ஜாலியா போயிட்டு வந்திடறேன். ஆனா, பாவம் நீ இடிபட்டு, லோல்பட்டு தினமும் சாவறது எனக்குக் கஷ்டமா இருக்கு அதனால், இனிமே என்னோடயே ரெண்டு வேளையும் வந்திடு...பஸ்ஸுக்கு என்ன கொடுக்கறே? ஒரு ட்ரிப்புக்கு மூணரை... அதாவது ஒரு நாளைக்கு ஏழு ரூபாய்...ரைட்டா? அப்ப, மாசம் என்னாவுது? இருநூத்திப் பத்தா? நாலு ஞாயித்துக்கிழமைய கழிச்சிடு... நூத்து எண்பது...அத என்கிட்ட கொடுத்திட்டு அலுங்காம, நலுங்காம மேல தூசி படாம, ஜம்முனு 'பிலியன்ல' உட்கார்ந்துகிட்டு நீ வரலாம், போகலாம்...என்ன சொல்றே? நண்பன்கிட்ட கை நீட்டி பணம் வாங்கறது மனசுக்குக் கஷ்டமாதான் இருக்கு. ஆனாலும் என்ன செய்றது! எனக்கும் ஸ்கூட்டர் கடன், பெட்ரோல், அது, இதுனு ஆயிரம் செலவு இருக்கு இல்லே!' என்று சென்ற வருஷம் ரகுபதி பாலவாக்கத்துக்குக் குடி போன புதுசில் ஒரு நாள் வரதன் கூறியதும், யோசிக்காமல் சம்மதித்தான்.

ஆனால், 'கத்தி போச்சு, வால் வந்தது' கதையாய், பஸ்ஸில் இடிபடும் கஷ்டம் இல்லாமல் போனாலும்,

மாலையில் நேரத்துக்கு வீடு திரும்பினோம் என்பது நடக்காமல் தினமும் இதே அவஸ்தைதான்.

பொறுக்க முடியாத நாட்களில் ரகுபதி வாயைத் திறந்து கேட்டிருக்கிறான்தான்:

''தினமும் லேட்டா வறீங்கனு என் பொண்டாட்டி கோவிக்கறா வரதன்... ஆபீஸ் விட்ட உடனே கிளம்பிடுய்யா...ப்ளீஸ்... எனக்காக...'' என்று முதல்தரம் கெஞ்சலாகக் கேட்டதும் வரதன் கண்ணாடியைத் தூக்கி விட்டுக்கொண்டு அவனைத் திர்க்கமாய் ஏறிட்டான்.

''என்னொட வர்றதால காலைல ஒம்பதே கால் மணிக்குத்தான் கிளம்பறே, இல்லாட்டி? எட்டு மணிக்கே புறப்பட்டுகிட்டு இருந்தவன்தானே? நானாச்சும் வண்டி ஓட்டி ஒரே டென்ஷனாயிடறேன், ஆனா நீ? சலவைச் சட்டை கசங்காம உட்கார்ந்துகிட்டு வறே! இதையெல்லாம் உன் பொண்டாட்டிகிட்ட எடுத்துச் சொல்றத விட்டுட்டு, என்னய்யா, என்னண்டை வந்து மூக்கால் அழறே?''

இன்னொரு சந்தர்ப்பத்தில், ''தங்கத்துக்குக் காய்ச்சலா இருக்கு, நேரா வீட்டுக்குப் போயிடலாம்ய்யா ...'' என்றபோது, புருவங்கள் கோபத்தில் முடிச்சுப் போட ''அத்தனை அவசரம்னா பஸ்ஸுல போயிடுய்யா... என்னால இறக்கைக் கட்டிகிட்டுப் பறக்க முடியாது'' என்று வரதன் திட்டவட்டமாய் கூறியிருக்கிறான்.

இவனிடமும் ஸீஸன் டிக்கெட் போலகாசை கொடுத்து விட்டு பஸ்ஸுக்கும் செலவழிக்கவும், கூட்டத்தில் இடிபடவும் ரகுபதிக்கு பைத்தியமா? அதற்குப் பிறகு வாயைத் திறப்பதில்லை. நடப்பது நடக்கட்டும் என்று சும்மா இருந்து விடுகிறான்.

நாயர் கடையை நெருங்கி அட்டகாஸமாக, ''எந்தா நாயர், நல்லா இருக்கிங்களா?'' என்று பாதி மலையாளம்



பாதி தமிழில் வினவி, 'ரெண்டு சாயா' என்றுசொல்லிவிட்டு பெஞ்சில் அமர்ந்த வரதன், பின்னொடு வந்த ரகுபதி பர்ஸை எடுத்து இருவருக்குமாய் சேர்த்து இரண்டு ருபாயை நாயரிடம் நீட்டியதும் நினைப்பு வந்த மாதிரி அவசரமாய் தடுத்தான்.

''எதுக்குய்யா நீ கொடுக்கறே? நாதானே டீ சாப்பிடக் கூட்டிட்டு வந்தேன்?''

இது ஒரு ஸ்டன்ட். நாலு பேர் மத்தியில் தான் ரொம்ப தாராளமானவன் என்று காட்டிக்கொள்ளச்செய்யும் பிகு. இப்போது இப்படிச் சொன்னாலும், தனியாக இருக்கையில் 'விஷயம் தெரியுமா உனக்கு? என்னிக்காவது ஒருநாள் அதிசயமா சுரேஷ் தனக்குக் கார்ல லிஃப்ட் கொடுக்கறதுக்கு நன்றி சொல்றவிதமா அவன் பிறந்த நாளுக்கு நம்ப குருமூர்த்தி ஒரு ரேமண்ட் ஷர்ட் வாங்கி பரிசா கொடுத்திருக்கானாம்! அடேயப்பா... நட்புனா அப்படி இல்லே இருக்கணும்' என்றும், இன்னும் பலவிதமாகவும் நிறையவே சொல்லிக் காட்டி இருப்பதால் இப்படித் தடுப்பது போல பாவனை பண்ணுவதையெல்லாம் ஒதுக்கித்தள்ள ரகுபதி கற்றுவிட்டான்.

''இல்ல... இருக்கட்டும்''

வரதன் நாயர் பக்கம் திரும்பிப் புன்னகைத்தான்.

''சொன்னா கேக்க மாட்டான்... பரவாயில்ல, நீங்க காசவாங்கிக்குங்க...அப்புறம்? எப்படி இருக்கீங்க? வியாபாரம் நல்லா நடக்குதா? நாலு நாளா கடைப்பக்கம் வரவே முடியல... ஆபீஸ்ல செம வேலை!''

பெஞ்சில் உட்காரப் பிடிக்காமல் ரகுபதி ஒரு பக்கமாய் நின்றுகொண்டு பார்வையை வெறுமனே அலைய விட்டான்.

பிஸ்கட், க்ரீம்பன், கடலைமிட்டாய்களைக் கொண்ட கண்ணாடி ஜாடி வரிசை. பித்தளை தட்டில் அம்பாரமாய்

மசால் வடைகள். மேலே தொங்கிய வாழைப்பழத் தார்கள்...

மஞ்சள் நிறத்தில் கட்டை விரல் சைஸுக்கு சிப்பு சிப்பாய் தெரிகிற பூவன் பழங்களைப் பார்த்தபோது ரகுபதிக்கு சட்டென்று முதல் முதலில் தான் வரதனை சந்தித்த நாள் ஞாபகத்துக்கு வந்தது.

அது நடந்து சுமார் இரண்டு வருஷங்கள் இருக்கும். திருச்சியில் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டு விட்டு இந்தக் கம்பெனியில் கணக்கு பிரிவில் சேர்ந்த புதுசு. யாரோடும் அவ்வளவாக அறிமுகம் ஏற்படாத காரணத்தால் மதிய சாப்பாட்டை முடித்துக் கொண்டு, காலார நடந்து நாயரின் பெட்டிக் கடைக்குப் வந்து பாக்குப் பொட்டலம் ஒன்றை வாங்கிப் பிரித்து வாயில் போட்டு மென்று, பத்தடி தள்ளி நின்று பராக்குப் பார்த்த போதுதான் வரதனை முதன் முறையாகப் பார்த்தான்.

நாயர் கடையை ஒட்டி வாழைபழங்களை கைவண்டியில் போட்டு விற்றுக் கொண்டிருந்த பழக்காரனிடம் சென்ற வரதன், ''என்ன விலை?'' என்று கேட்டது ரகுபதிக்குக் கேட்டது.

''ஒண்ணு ஒரு ருபா...''

''அடேங்கப்பா! என்ன அநியாயமா சொல்றே நீ! ருபாய்க்கு ரெண்டு தரியா?''

''கட்டுப்படியாவாது சாமி...வேணா, ரெண்டு ருபாய்க்கு மூணு எடுத்துக்க...''

'பழம் சின்னதா இருக்கு... தாராளமா ருபாய்க்கு ரெண்டு தரலாம்'' இப்போது அந்த வண்டிக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது.

''அதெல்லாம் தர முடியாது பழத்த வச்சிட்டு நவுரு.



வரதன் ஏமாற்றத்தோடு நகர, ரகுபதியும் அவனைத் தொடர்ந்து அலுவலகத்தை நோக்கி நடந்தான்.

படிக்கட்டுகளில் ஏறியபோது எதிரில் ஒரு ஐம்பது வயசுக்காரர் வர, வரதன் நின்றான்.

''என்ன சார், இந்த வெயில்ல எங்க கிளம்பிட்டீங்க?'

''இன்னிக்கு சிரவண விரதம். சாப்பாடு கொண்டு வரா... ரெண்டு வாழைப்பழம் வாங்கி. சாப்பிடலமேனு'

அவரை முடிக்க விடாமல் வரதன் குறுக்கிட்டான்.

''வாழைப்பழம் வேணும், அவ்ளோதானே? பட்டினியோட நீங்க ஏன் வெயில்ல அலையறீங்க? காசக் கொடுத்திட்டு நீங்க ஸீட்டுக்குப் போங்க...நா போய் வாங்கிட்டு வரேன்''

அவர் நீட்டிய இரண்டு ருபாயோடு நடந்த வரதன் கைவண்டிக்காரரிடம் சென்று மூன்று பழங்களை வாங்கி, ஒன்றை அங்கேயே நின்று தின்றுவிட்டு மிச்சம் இருந்த இரண்டு பழங்களையும் எடுத்துக்கொண்டு வேகமாய் திரும்பி வந்து அலுவலகத்துக்குள் செல்ல—படிக்கட்டுகளில் நின்று அத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரகுபதிக்கு, ''யார் இந்த எமகாதகன்!'' என்ற வியப்பு எழுந்தது. அன்றைக்கு வரதனைப் பற்றி அனா ஆவன்னா எதுவும் தெரியாது; சில நாட்களுக்குப் பிறகு நண்பர் ஒருவர் மூலம் அறிமுகம் ஆனபோது கைக் காசை செலவழிக்காமல் ஓசியில் பழம் வாங்கித் தின்ற இவன் பெயர் வரதன், விற்பனை பிரிவில் வேலை பார்க்கிறான், இத்யாதி, விபரங்களும் தெரிய வந்தன. ஆறு மாசங்களில் ரகுபதிக்கும் விற்பனைப் பிரிவுக்கு மாற்றல் ஆகிவிட, வரதனின் ஜாதகம் நீங்கலாக ஓரளவுக்கு எல்லாமே புரிபட்டுப் போயின.

உலகில் ஒருத்தரைப்போலவே ஏழு பேர்கள் இருப்பார்கள் என்று ரகுபதி படித்திருக்கிறான். ஆனால்

வரதனைப் பொறுத்தவரை அவன் ஒரு அலாதி காரெக்டர், அவனைப்போல வேறு எவரும் இருப்பது சாத்தியமில்லை என்பது ரகுபதியின் கருத்து.

வரதன் சாதாரண கெட்டிக்காரன் அல்ல—ஜகஜ்ஜால சாமர்த்தியன், வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வரும் ரகம். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்; ஒருத்தர் கேட்காமலேயே உதவி பண்ணுவான். ஆனால், பதிலுக்கு எதையாவது பெறாமல் இருக்கவே மாட்டான். பல சந்தர்ப்பங்களில் அவன் செய்வதைவிட திரும்பப் பெறுவது பல மடங்கு அதிகமாக, உயர்வாக இருப்பது தான் வழக்கம். அதுவும் ஓசியில் பலங்களைப் பெறுவதில் மன்னன். "கைக்காசு செலவழிக்காமல் காரியத்தை நடத்திக் கொள்ள தனி சாமர்த்தியம் வேணும்ய்யா... அந்த விஷயத்துல நா மச்சத்தோட பிறந்தவன்!" என்பான் கண்களை சிமிட்டிக் கொண்டு...

அது என்னவோ உண்மைதான். ரகுபதிக்கு வீடு பார்த்துக் கொடுத்ததையே இதற்கு நல்ல உதாரணமாகச் சொல்லலாமே!

திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்தபோது தெரிந்தவர்கள் பக்கத்தில் இருக்கிறார்கள், சமயத்துக்கு உதவுவார்கள் என்ற எதிர்பார்ப்போடு ரகுபதி சேத்துபட்டில் எழுநூறு ரூபாய் வாடகையில் ஒரு மாடிப்போர்ஷனை வாடகைக்கு எடுத்தான். குடிபோன பதினைந்து நாட்களுக்கெல்லாம் ஏண்டா சென்னைக்கு வந்தோம் என்று கூட தோன்றிவிட்டது. அத்தனை சிரமங்கள் அடுக்கடுக்காய்...முதலாவது தண்ணீர் கஷ்டம். மாடிக் குழாயில் சொட்டு நீர் வரவில்லை. அர்த்தராத்திரி இரண்டு மணிக்கும், மூன்று மணிக்கும் தண்ணீர் லாரி வருவதை கழுகு மாதிரி பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, கீழே ஓடி, அண்டை அயலார்களுடன் முட்டி மோதி, ஒரு குடம் தண்ணீர் பிடிப்பதற்குள் போதும் போதும் என்றான து.



தண்டவாளத்தை ஒட்டி வீடு இருந்து, நிமிஷத்துக்கு ஒரு தரம் மின்சார ரயில் கடகடவென்று ஓடியதில் எப்போதும் மண்டைக்கு ஒரு இரைச்சல். இத்தனை போதாது என்பதுபோல காபி, டிபன் நேரத்துக்கு மணி அடித்துக் கூப்பிட்ட மாதிரி வந்து வெட்கம் இல்லாமல் உட்கார்ந்து விடும் உறவுக்காரர்கள். எல்லாமாகச் சேர்ந்து கொண்டு பித்து பிடிக்க வைத்த. அந்த சமயத்தில் ரகுபதிக்கு விற்பனைப் பிரிவுக்கு மாற்றல் வர, கூட வேலை பார்த்த கணேசனிடம் தன் கஷ்டங்களைச் சொல்லி ரகுபதி புலம்பிய ஒரு மதிய வேளையில், 'யாமிருக்க பயமேன்?' என்று எதேச்சையாய் அத்தனையும் கேட்க நேர்ந்த வரதன் அபயக்கரம் நீட்டினான்.

"இதுக்காகவாய்யா இவ்வளவு கலங்கறே? இந்த டிபார்ட்மெண்டுக்கு வந்து பத்து நாளாவப் போவுது. இன்னிக்குதான் உன் பிரச்னை என்னானு சொல்லியிருக்கே. வந்த அன்னிக்கே தெரிவிச்சிருந்தா இதுக்குள்ள நீ ராஜா மாதிரி கால் மேல கால் போட்டு உக்காந்துகிட்டு இருக்க நா வழி பண்ணியிருப்பேன்...இப்ப மட்டும் என்ன கொறைஞ்சிடுச்சி? தண்ணி வசதியோட, காத்தோட்டமா மலிவான வாடகைல ஒரு வீடு வேணும், அதானே? விடு, கவலைய! சரியா இருபத்திநாலு மணி நேரத்துல நல்ல சேதியோட வரே..."

ராட்சஸன்! சொன்னதைச் செய்து விட்டானே!

மறுநாள் காலையில் முகமெல்லாம் சிரிப்பாக நேராக இவனிடம் வந்தான். "உன் வேலைய முடிச்சிட்டேன், ஸ்வீட் வாங்கித் தந்தாதான் விவரம் சொல்வேன்" என்று கூறி, அலுவலக நேரம் என்றுகூட தயங்காமல் ரகுபதியை அழைத்துக்கொண்டு வெளியே போனான்.

பாலவாக்கத்தில், அவன் தெருவிலேயே ஒரு வீட்டின் கீழ் போர்ஷன் காலியாக உள்ளதாம். அருவிபோல

என்னேரமும் தண்ணீர் கொட்டுமாம்! காற்று பிய்த்துக்கொண்டு வீசுமாம்; புறாக் கண்டு மாதிரி ஒண்டுக்குடித்தனங்கள் இல்லையாம்; மாடியில் வீட்டுக் சொந்தக்காரர்களாம், கீழே குடித்தனக்காரர்கள்...அவ்வளவே... இத்தனை வசதிகள் இருந்தும் வாடகை அறுநூறுதானாம்! வழக்கமாய் ஆறு மாச வாடகையை முன்பணமாகக் கேட்பவர், வரதனுக்காக மூன்று மாசம் போதும் என்று ஒப்புக் கொண்டிருக்கிறாராம்...

வரதன் எதையும் மிகைப்படுத்தவில்லை. சேத்துப்பட்டில் எந்த வசதிகளும் அற்ற மூக்கோட்டை மாதிரியான பொந்துக்கு எழுநூறு ரூபாய் கொடுத்ததோடு ஒப்பிட்டால் பாலவாக்கம் வீடு அரண்மனைதான்! என்ன, ஆபீஸுக்கு வந்து போவது கொஞ்சம் சிரமம் பஸ் கட்டணமும் அதிகமாகும் - பரவாயில்லை. வாடகையில் சேமிக்கும் நூறு ரூபாயை அதற்கு ஈடு செய்து விடலாம்.

அடுத்து வந்த வெள்ளிக்கிழமை ரகுபதி மனைவி தங்கத்துடன் புது வீட்டுக்கு குடி போனான். கிட்ட இருந்து டெம்போவில் சாமான்களை ஏற்றி, புது வீட்டில் இறக்கியது முதல், தன் மனைவி குழந்தைகள் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அறிமுகம் செய்வித்து, அருகில் கடைகள் எங்கெங்கு இருக்கின்றன என்று காட்டி கொடுப்பது வரை கூடலே நின்று வரதன்தான் உதவினான் ஆனால், இவற்றோடு எத்தனை சாமர்த்தியமாய் தன் இயல்புக்கேற்ப சுயலாபத்தையும் கவனித்துக் கொண்டுவிட்டான் என்பதை எப்போது நினைத்தாலும் ரகுபதிக்குள் வியப்பு மண்டும்.

வீட்டுக்காரரிடம் அட்வான்ஸ் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பியபோது ஒரு தரம், பின்னர் சாமான்களை டெம்போவில் ஏற்றும்போது இன்னொரு தரம் -



வரதன் பேச்சோடு பேச்சாக ஒரு செய்தியை வெளியிடத் தவறவில்லல.

“நம்ம சாமிநாதன் தெரியுமில்ல...அதான்ய்யா, நிர்வாகப் பிரிவில இருக்காரே, அவருதான்...நேத்து கான்டீன்லப் பார்த்தப்போ பேசிட்டிருந்தார். ‘செகண்ட் ஹாண்ட் கார் ஒண்ணை சிநேகிதன் மலிவா வாங்கித் தந்தான். தரகர் மூலமா வாங்கியிருந்தா என்ன கமிஷன் ஆகுமோ அதை ஒரு கவர்ல வச்சி நண்பன்கிட்ட கொடுத்திட்டேன் - பிஸினெஸ்னா பிஸினெஸ்தான். நல்ல பொருளை ஆலைச்சல் இல்லாம வாங்கிக் கொடுத்ததுக்கு இதுகூட செய்யாட்டி எப்படி?'னு சொன்னார் நேர்மையான பேச்சு இல்லையா?” என்றான்

“எங்க அத்தான் ரொம்ப உசந்த மனுஷன்ய்யா...பல நல்ல குணங்கள நா அவருகிட்டேயிருந்துதான் கத்துகிட்டேன் ஒரு தரம் பாரு, அவர் மகளுக்குத் தெரிஞ்சவங்க சொல்லி நல்ல எடத்துல நிச்சயம் பண்ணாரு... தரகர் கமிஷன் மிச்சம்னு சந்தோஷப்படாம, கல்யாணத்தன்னிக்கு உதவி செஞ்சவங்களுக்கு சான் அகல சரிகைப் புடவை, பட்டு வேட்டி வாங்கிக் கொடுத்து அமர்க்களப்படுத்திட்டார். 'எதுக்கு அத்தான்?'னு கேட்டா, 'மனுஷனுக்கு நன்றி உணர்வு வேணாமா?'னு பதிலுக்குக் கேட்டு சிரிக்கிறார்! என்ன உசந்த குணம் பாருய்யா...” என்றான்

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. இரண்டு சூடுகளைப் புரிந்து கொள்ளாமல் இருக்கும் அளவுக்கு ரகுபதி மடையன் அல்ல.

வீட்டுக்குக் குடி வந்த அன்று கவரில் ஒரு மாத வாடகையான அறுநூற்றை வைத்து வரதனிடம் நீட்டினான்.

“என்னய்யா?”

ஒண்ணுமில்ல...வாங்கிக்க...”

"என்னான்னு கேக்கறேன் இல்ல..." கவரை வாங்கியவன் புருவங்களை உயர்த்தினான். "பணமா? எதுக்குய்யா?"

"இவ்ளோ நல்ல வீட்டைப் பிடிச்சுத் தந்திருக்கே... தரகர் வழியா போனா கமிஷன் கொடுத்திருக்க மாட்டேனா?" அவன் சொன்ன வார்த்தைகளையே கிளிப்பிள்ளை போல ரகுபதி திருப்பிச் சொன்னான்.

தொடர்ந்து, பணம் தந்துவிட்டு வரதனோடு ஸ்கூட்டரில் வந்து போவது ஏற்பாடாயிற்று.

கிட்டத்தட்ட ஒண்ணரை வருஷங்களாய் வரதனோடு நெருங்கிப் பழகியும் இன்னமும் அவனை சரியாய் கணிப்பது ரகுபதிக்கு சாத்தியமாகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்

பல முறை ரகுபதி தனக்குத்தானே குழம்பியிருக்கிறான் - 'இவன் உபகாரியா, இல்லை, காரியவாதியா?' என்று யோசிக்க யோசிக்க இரண்டும்தான் என்பது புரிந்தது. அதைவிட, எதைச் செய்தாலும் அதில் இரட்டிப்பு ஆதாயம் கிடைக்கும்படி திட்டமிட்டு நடக்கும் சாமர்த்தியசாலி என்பது நன்றாகவே புரிகிறது. ஆனாலும், இவனை விட சாமர்த்தியசாலி பிறக்காமலா இருப்பான்? அவனிடம் இவன் பாச்சா பலிக்காமல் போகுமா, இல்லை, 'ஐயா மச்சத்தோட பிறந்திருக்கேன்ய்யா' என்று வரதன் கண் சிமிட்டிச் சொல்லும் அதிர்ஷ்டம் ஆயுசுக்கும் தொட...

மேலே சிந்தனை செய்ய முடியாமல் வரதனின் குரல் குறுக்கிட்டது.

"என்னய்யா...டீ ஆறிப்போவறது கூட புரியாம யோசனை பண்ணிக்கிட்டு இருக்கே? நாளைக்கு சனிக்கிழமை, அரை நாள் தான் ஆபீஸ்ன்றதால பொண்டாட்டியோட ஜாலியா மாட்னிஷோக்கு எந்தப் படத்துக்குப் 



போகலாம்னு பிளான் பண்ணிட்டு இருந்தியா? நீ கொடுத்து வச்சவன்ய்யா...புள்ளக் குட்டிங்கன்னு எந்தப் பிடுங்கலும் கிடையாது...சட்டு புட்டுனு ஒரு முடிவுக்கு வந்திடலாம்...எங்க வீட்டை எடுத்துக்க...பெரியவன் ரஜினியோட விசிறி, சின்னவனுக்கு கமல்னா உசிரு! இவன் அந்தப் படத்துக்குப் மோவலாம்னு சொன்னா, அவன் இல்லை இந்தப் படத்துக்குத்தான் முதல்ல போகணும்னு முரண்டு பண்ணுவான். எப்பவுமே ரெட்டை செலவுதான்! என்னதான் வீடியோலபடம் பார்த்தாலும், 'கொட்டகைல பார்க்கற குஷி வரலீங்க'னு இந்தப் பசங்களுக்கு என் பொண்டாட்டி ஸப்போர்ட் வேற...வாங்கற சம்பளத்துல பாதி சினிமா ஆசையப் பூர்த்தி பண்ணத்தான் சரியாயிருக்குது..."

உரக்கப் பேசி, பெருமையுடன் சிரித்த வரதன் டம்பளரை நாயரிடம் கொடுத்துவிட்டு, ஒரு வடையை எடுத்துக் கடித்தான். குனிந்து சின்னக் குரலில் வினவினான்.

"என்ன நாயர், வந்ததுலேந்து நானும் கவனிச்சுகிட்டுதான் இருக்கேன். முகம் வாடின மாதிரி இருக்க... பேச்சும் வழக்கமான கலகலப்போட இல்ல...என்ன விஷயம்?"

நாயர் புன்னகைத்து சமாளிக்க முயன்றார்.

"ஒண்ணுமில்ல சார்...விடுங்கோ..."

வரதன் பிடிவாதம் பிடிக்க, நாயர் மெது மெதுவாய் விஷயத்தை வெளியிட்டார்.

அவர் மகளுக்கு இது தலைப்பிரசவமாம். ஓரிரு நாளில் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டுமாம். தெரிந்த இடத்தில் கடன் கேட்டிருந்தாராம். தருகிறேன் என்று வாக்குக் கொடுத்தவர் கார் விபத்தில் மாட்டிக் கொண்டு ஆஸ்பத்திரியில் அவரே படுத்து விட்டாராம். அடமானம்

வைக்கத் தோதாய் பொருள் ஒன்றும் இல்லையாம், என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாராம்...

குறுக்கே பேசாமல் அத்தனையும் கேட்ட வரதன், அடி உதட்டைக் கடித்தவாறு கொஞ்சம் யோசித்தான். பிறகு, ''தோராயமாய் எவ்ளோ பணம் கடனா தேவைப்படும் நாயர்?'' என்று கேட்டான்.

''பிரசவம், குழந்தைக்கு நகை, போக்குவரத்து... குறைந்தபட்சம் பத்தாயிரமாவது தேவைப்படுது சாரே...''

''ம்ம்...'' வரதன் மறுபடி சிந்தனையில் ஆழ்ந்தான்.

''வட்டி கூட ஆனா பரவாயில்லையா?''

''எண்ட குருவாயரப்பா...பணம் கிடைச்சா போதும் சாரே...வட்டி பத்தி எனிக்கி கவல இல்லா...''

வரதன் அவன் தோளில் தட்டினான்.

''உங்க நேரம் நல்லா இருக்கு நாயர்—பணம் கைக்கு வந்திடுச்சுன்னு வச்சிக்கங்க ... இருபது பர்செண்ட் வட்டிக்குப் பணம் தர ஒரு ஆள் இருக்கு...இப்பவே நா போய் பேசறேன். ஒரு வருஷத்துல பணத்தைத் திருப்பிடணும், மாசா மாசம் வட்டிய ஒழுங்காத் தரணும்... என்ன சொல்றீங்க?'' நாயரிடம் கூறியவன் ரகுபதி பக்கம் திரும்பி கிசுகிசுப்பாய், ''ஐயாவுக்கு மச்சம் இருக்குனு ஒத்துக்கறயாய்யா?'' என்று வினவ, அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்பது சட்டென்று விளங்கியது.

அன்று காலை அலுவலகத்துக்குப் புறப்படத் தயாராகி வரதன் ஸ்கூட்டரோடு வாசலுக்கு வந்தபோது, 'ஒரு நிமிஷம்' என்றவாறு மாடியிலிருந்து வீட்டுக்கார பெருமாள் இறங்கி வந்தார்.



''உங்க கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். எங்கக்கா புருஷனை இழந்தப்பறம் வடக்கே இருக்கற பிள்ளைகிட்ட போக மாட்டேன்னு எங்க வீட்டோட வந்திட்டா, தெரியும் இல்லியா? அவ ஒரு பத்து, பதினைஞ்சாயிரம் ருபா கையில வச்சுகிட்டு இருக்கா...நல்ல கம்பனி, இல்ல, மனுஷங்களா இருந்தா 'டெபாஸிட்' பண்ணி வைக்கலாம். பாங்கை விட வட்டி கூடுதலா கிடைக்கும். மாசம் நூறு ருபா போல கிடைச்சா, அவ கையில நாலு காசோட கோயில், குளம்னு போயிட்டு வரலாம். இங்க, அங்க அலைஞ்சு விசாரிக்க எனக்கும் தெம்பில்ல...அதான் உங்க கிட்ட சொல்றேன்...இப்படி நடு ரோட்டுல நிறுத்திப் பேசறத்துக்காகக் கோவிக்காதீங்க...''

''என்ன வட்டி எதிர்பார்க்கறீங்க?''

''பதினாலு, பதினைஞ்சு கிடைச்சா போதும்...''

''தெரிஞ்சவங்ககிட்ட சொல்லி வெக்கிறேன்...பண விவகாரம், அவசரப்படக்கூடாது பாருங்க...''

காலையில் விதைத்த விதை மாலையில் பூப்பது என்றால் எத்தகைய அதிர்ஷ்டம் அது!

அங்கு பதினைந்துக்கு வாங்கி, இங்கு இருபதுக்குக் கொடுத்து, நடுவில் தான் ஐந்து சதம் தட்டிக் கொள்ளப் போகிறானா? அதாவது உட்கார்ந்த இடத்திலிருந்து சுளையாய் ஐநூறு ரூபாய் வரும்படி! இது மச்சத்தின் வேலை இல்லாமல் வேறு என்ன?

வரதன் கண்ணாடி ஜாடியைத் திறந்து கடலை மிட்டாய்ச் சதுரம் ஒன்றை வெளியே எடுத்தான் ஒரு வில்லையை உடைத்து ரகுபதியிடம் தந்துவிட்டு மற்றதை தின்றவாறு பேசினான்—

''எனக்கு ரொம்ப வேண்டப்பட்டவங்க நாயர்... வட்டிய கரெக்டா கொடுத்திடணும். அசலை எப்ப கேக்கறாங்களோ, அப்ப திருப்பிடணும். ஒரு தரம்கூட தவறக்கூடாது. இல்லாட்டி என் பேர் ரிப்பேராயிடும்...''

''சாரே...அந்த சந்தேகம் வேண்டவே வேணாம். நாயர்க்கு வாக்கு சுத்தம் உண்டு. இந்த எடத்துல பத் வருஷமா கடை நடத்தறேன். தலைய அடகு பிடிச்சாச்சு வார்த்தையக் காப்பாத்துவேன்...என் கஷ்டத்துக்கு கை கொடுக்கற நிங்கள் எனக்குத் தெய்வத்துக்கு சமம்...இ சத்தியம் சாரே...''

உணர்ச்சி வசப்பட்டு பேசிய நாயர் வேட்டி முனையை உயர்த்தி கண்களைத் துடைத்துக் கொள்ள, வரதன் அவ கைகளைப் பற்றிக் கொண்டான்.

''மனுஷனுக்கு மனுஷன் செய்யற உதவியப் போய் பெரிசுபடுத்திராதீங்க நாயர்...அப்போ, நாங்க கிளம்ப றோம். நாளைக்குப் பணத்தோட வரேன்...''

ஒரடி நடந்தவன் ஏதோ நினைத்துக் கொண்ட மாதிரி திரும்பி

''என் பசங்களுக்கு மசால் வடைனா ரொம்பப் பிடிக்கும். நாலு வடைகள பார்சல் கட்டித் தாங்க... என்ன விலை, சொல்லுங்க?'' என்றான்.

பத்து வடைகளைப் பிளாஸ்டிக் பையில் போட்டு நீட்டிய நாயர், விலை சொல்ல மறுத்து, ''உங்க பசங்களுக்குக் கொடுக்கற பதார்த்தத்துக்கு நான் காசு வாங்கலாமா சாரே?'' என்றும் நெகிழ்ச்சியோடு கூற, பத்தாயிரம் ரூபாய் கடன், வரதனுக்கு ஐந்து சதவித வட்டி மட்டுமல்லாது அடுத்த ஒரு வருஷத்துக்குக் கடை தின்பண்டங்களையும் இலவசமாய் வாறித் தருவதாக இருக்கப் போகிறது என்பதை ஊகிக்க முடிய, ரகுபதிக் குள் சின்னதாய் மூண்டிருந்த எரிச்சல் அதிகமானது.

'ப்ச்' என்று காரணம் இல்லாமல் சூள் கொட்டி னான். எரிச்சலை வெளியிடாமல், ''கிளம்புய்யா...நாழி யாச்சு...'' என்று மெதுவாக முனகினான்.

## 2

வராந்தாவில் பிரம்புக் கூடை நாற்காலியை எடுத் துப் போட்டுக் கொண்டு பராக்குப் பார்த்தபடி சோம் பேறித்தனமாய் உட்கார்ந்திருப்பது சுகமாக இருந்தது.

விடுமுறை நாளென்றால் இது ஒரு இன்பம். காலை யில் இஷ்டத்துக்கு தாமதமாய் எழுந்திருக்கலாம். பல் விளக்காமல் காபி சாப்பிடலாம். நிதானமாய் பேப்பரை வார்த்தை வார்த்தையாய், விளம்பரம் விடாமல் படிக்க லாம். வழிய வழிய எண்ணை வைத்துக் கொண்டு தலைக் காப்பிட்ட மதுரை வீரன் மாதிரி வளைய வந்து விட்டு, ஆற அமர குளிக்கலாம். அல்லது, சோம்பேறித் தனம் அதிகமாய் இருந்தால் படுக்கையிலேயே புரண்டு புரண்டுப் படுத்து, இரண்டாம் டோஸ் காபி வாங்கிக் குடித்து, மீண்டும் கண்ணயர்ந்து, குளிக்காமலேயே கூட சாப்பிட்டு, டி. வி. நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் பார்க்க லாம்...அலட்டிக் கொள்ளாமல் பொழுதைக் கழிக்க எத்தனை வழிகள்!

தங்கம் வீட்டில் இல்லை. மதியம் சாப்பாடாகி இவன் வெற்றிலை போட்டுக் கொண்டு, அன்றைய தினசரி மார்பில் விரிய படுத்து உறங்க ஆயத்தம் பண்ணிய நிமிஷத்தில் அவள் அறைக்குள் வர, முப்பத்தைந்து வயசி லும் தங்கம் சின்னப் பெண் மாதிரி எப்படி 'ணங்' கென்று இருக்கிறாள் என்கிற நினைப்பு எழுந்ததில், ரகுபதி விழித் துக் கொண்டான்.

கிட்டத்தில் வரும்படி மனைவிக்கு சைகை காட்டி னான்.

அவன் பார்வையும், முகபாவனையும் விவரத்தைத்

தங்கத்துக்கு உணர்த்தியிருக்க வேண்டும். இருந்த இடத்திலிருந்தே 'மாட்டேன்' என்று தலையசைத்தாள்.

''என்?''

''இப்போ அதுக்கெல்லாம் நேரம் இல்ல...''

''எதுக்கெல்லாம்?''

''உங்ககிட்ட வாய் கொடுக்க எனக்கு ஆகாதுங்க...''

''வாயக் கொடுக்கத்தான் கழுத்துல லைசென்ஸ் கட்டியிருக்கேனே...''

தங்கம் வெட்கத்தோடு சிரித்தாள்.

''நேத்துதான் கல்யாணம் ஆன நினைப்பா? பேச்சைப் பாரு!''

''நேத்து ஆனா என்ன, பதினைஞ்சு வருஷம் முன்னால ஆனா என்ன! என் மனசு இளமையா இருக்கு—நீயும் ஆள் இளசா இருக்கே! அப்புறம் என்ன? கிட்ட வாம்மா...''

''ஐயோ...என்னங்க நீங்க! நேரம் காலம் புரியாம வெளையாடிகிட்டு... சகுந்தலாக்கா ரெண்டரைக்கு வரேன்னு சொல்லியிருக்காங்க...அவங்களோட வெளியே போகணுமாம். மணி இப்பவே ரெண்டேகால் ஆயிடுச்சு ...இனி நா சேலல மாத்தித் தயாராகி, உங்களுக்குக் காபி கலந்து பிளாஸ்குல வச்சிட்டு கிளம்பணும்...நேரமாச்சுங்க...''

ரகுபதி எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

''இந்த வெயில்ல எங்க போப்போறீங்க?''

''வெவரமா தெரியாது...மார்க்கட்டுல காய் வாங்கிகிட்டு, தெரிஞ்சவங்க வீட்டுக்கும் போயிட்டு, சாயங்காலம் தமிழ்ப்படம் துவங்கறத்துக்குள்ளார வந்துடலாம்னு



சொன்னாங்க...நீங்க எதுவும் சொல்ல மாட்டீங்களேனு சரினுட்டேன்...''

பேசிக்கொண்டே தங்கம் புடவை மாற்றிக் கொண்டாள். தலை பின்னி, முகம் கழுவி, பௌடர் பூசி, பொட்டிட்டாள். சமையல் அறைக்குச் சென்று காபி கலந்து பிளாஸ்கில் ஊற்றி வைத்தபோது வாசகேட் திறக்கும் ஓசை கேட்டது.

''அக்கா வந்துட்டாங்க...நா கிளம்பறேன்...சமையல் கட்டு மேடைல பிளாஸ்கும், பக்கத்துலயே டப்பால கை முறுக்கும் வச்சிருக்கேன் சாப்பிட்டுக்கங்க...'' என்றவள் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே போனாள்.

ஒரு குட்டித் தூக்கம் போட்டு, நாலு மணிக்கு எழுந்து, காபி குடித்துவிட்டு கையில் இரண்டு முறுக்குகளை எடுத்துக் கொண்டு ரகுபதி வாசலுக்கு வந்தான் தோட்டம் என்று பெரிசாய் எதுவும் இல்லாவிட்டாலும், தளதளவென்று வயசுப் பெண் மாதிரியான வளர்த்தியோடு இருந்த செம்பருத்தி, அரளிச் செடிகளைச் சுற்றி வந்து ஒரு பார்வை பார்த்தான். வீட்டுக்கார பெருமாளின் சம்சாரம் காந்திமதி அம்மாவுக்கு வயசாகி விட்டபோதும், சுறுசுறுப்புக்குப் பஞ்சமில்லை. முடிந்ததோ, முடியவில்லையோ, தினமும் கீழே இறங்கிவந்து செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றவும், மாசத்துக்கு ஒரு முறை பால்கார ஆயாவின் புருஷனை வரவழைத்துச் செடிகளை கொத்தி, கையளவு எரு வைக்கவும் தவறவே மாட்டாள். தங்கத்துக்கும் தோட்டத்தில் ஆர்வம் இருக்க, இவர்கள் இங்கு வந்த பிறகு புதுசாய் ரோஜா, ஜாதி, பவழமல்லிச் செடிகளை நட்டு, கிட்ட நின்று பராமரித்ததில் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் பச்சென்று பசுமையும், வண்ணப் பூக்களும் வாறி இறைகின்றன.

வேலியில் படர்ந்திருந்த போகன்வில்லா கொடியில் சில கிளைகள் தாறுமாறாய் நீட்டிக் கொண்டிருந்ததை

வளைத்து வேலிக்கம்பியில் செருகியபோது கண்ணன், வரதனின் மூத்த மகன், சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

''என்ன கண்ணா, வண்டிய ஓட்டிக்கிட்டுப் போகாம தள்ளிகிட்டு வர்றே?''

''டயர்ல காத்து கம்மியா இருக்கு...''

'பஞ்சரோ என்னமோ...காத்து புடிச்சுப் பாத்தியா?''

''மூணாவது தெரு கல்யாணம் 'பீச்சுக்குப் போலாம், சைக்கிள் எடுத்திட்டு வாடா'ன்னு சொன்னான். 'எதிர் காத்துல என்னால சைக்கிள் ஓட்ட முடியாது, நீஓட்டினா வரேன்'னு சொன்னேன். ஒத்துகிட்டான். இப்பப் போயி பஞ்சர் ஒட்டறதும் அவன் பொறுப்புதான்னு சொல்லிடுவேன், ஓசில சைக்கிள் வேணுன்னா எதுனாச்சும் பதிலுக்கு' செஞ்சுதானே ஆகணும்!''

தெருமுனை திரும்பி கண்ணிலிருந்து அவன் மறையும் வரை ரகுபதி பார்த்துக் கொண்டே நின்றான்.

அப்பனுக்குப் தப்பாத பிள்ளை. தகப்பன் எட்டடி பாய்ந்தால் இவன் இந்த வயசிலேயே பதினாறடி பாய்கிறானே!

பாராட்டும் வகையில் உதட்டைச் சுழித்து தனக்குத் தானே சிரித்தவன் வீட்டுக்குள்ளிருந்து கூடை நாற்காலியை எடுத்து வந்து வராந்தாவில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

காற்று ஜிலுஜிலுவென்று வீசியது.

அதிக மனித சந்தடி இன்றி காணப்பட்ட தெருவைப் பார்க்கையில் மனசின் சந்தோஷம் அதிகமானது

சேத்துப்பட்டு வீட்டின், தெருவின், இரைச்சலுக்கு இது நேர் எதிர். அது சந்தைக்கடை என்றால், இது கோவில் சன்னிதி. அத்தனை அமைதி. பொதுவாகவே நகரின் சந்தடிகள் புறநகர் பகுதிகளில் கம்மிதான் என்றாலும் இவர்கள் வசிக்கும் தெரு பிரதான பாலவாக்கம் ஊரின் விளிம்பில் இருந்ததால் ஜன நடமாட்டம் ரொம்பவும் கம்மி. தெருவில் இருந்த ஏழு வீட்டுக்காரர்களையும் வந்து போகும் வியாபாரிகளையும் தவிர வேறு வண்டி, வாகனம். மனித சந்தடி கிடையவே கிடையாது.



இவர்கள் இருப்பது தெருவின் துவக்கத்தில். அடுத்து எதிரும் புதிருமாய் ஐந்து வீடுகள். அவற்றைத் தாண்டி கொஞ்சம் காலி மனை. கடைசியாய், இரண்டு கிரவுண்டு நிலத்தில், தெருவிலேயே பெரிசாய் இருப்பது வரதனின் வீடு.

'பங்களா வீடு' என்று அந்தத் தெருவுக்கு வந்து போகும் வியாபாரிகளால், இதர வீட்டு வேலையாட்களால், தன் இல்லம் குறிக்கப் படுவதில் வரதனுக்கு ஏக பெருமை. இத்தனைக்கும் மாளிகை மாதிரியான வீடு என்றெல்லாம் சொல்ல முடியாது. அந்தத் தெருவில் இருந்த மற்ற வீடுகளைவிட கொஞ்சம் பெரிசு. அவ்வளவே. அது என்ன 'பங்களா வீடு'? ஒன்று 'பங்களா' என்று சொல்ல வேண்டும், அல்லது 'பெரிய வீடு' என்று அழைக்கலாம். ஒரே அர்த்தத்தைத் தரும் இரண்டு வார்த்தைகளை சேர்த்துச் சொல்வது எதற்கு?—என்று வந்த புதுசில் ரகுபதி வேடிக்கையாய் எண்ணினாலும், இப்போது அவனும் 'பங்களா வீடு' என்று சொல்லப் பழகி விட்டான்.

வரதனின் மனைவி சகுந்தலாவுக்குக் கடலூர் பக்கம். கரும்பும் மல்லாக்கொட்டைப் பயிரும் சாகுபடி செய்து பணம் சேர்த்த ஓரளவு வசதியான மிராசுக் குடும்பம். அவர்களுடையது. சகுந்தலா அணிந்திருந்த நகைகளும். வீட்டில் பூஜை அறை முதற்கொண்டு சமையல்கட்டு வரை புழங்கும் கிழங்கு கிழங்கான வெள்ளிப் பாத்திரங்களும்

அவள் பிறந்த குடும்பத்தின் பெருமையை நன்றாகவே பறை சாற்றும்.

"இத்தனை நகை நட்டு, பாத்திரம், சாமான்களை தைரியமா வீட்டுலயே வச்சிட்டு இருக்கீங்களே, உங்களுக்கு பயமா இல்லியா சக்கு அக்கா?" என்று நெருக்கமாய் பழகத் துவங்கிய பிறகு தங்கம் அவளிடம் நேரடியாகவே கேட்டபோது, தலையைப் பின்னுக்குத் தள்ளி அலட்சியமாய் சகுந்தலா சிரித்தாள்.

"பயமா? எனக்கா? நா மல்லாட்டைக் காட்டுல பொறந்து வளர்ந்தவடீ! ஓடற பாம்பைக் காலால மிதிச்சுகிட்டு நடப்போம். கிராமத்து மனுஷங்களுக்கு எதுக்கும் பயம் கிடையாது அதெல்லாம் உன்னை மாதிரி நோஞ்சான் பட்டணத்துக் காரங்களுக்குத்தான்..." என்றாளாம் அந்த சிரிப்பு மாறாமல்.

தாங்கள் துணிச்சல் மிக்கவர்கள் என்று தற்பெருமை இருந்தபோதும் அவர்கள் வீட்டைத் திறந்து போட்டுவிட்டு அசட்டையாக இருந்தோ, கண்டவர்களை வீட்டுக்குள் அனுமதித்தோ, வீட்டு வேலைக்கு இஷ்டத்துக்கு ஆட்களை அமர்த்தியோ இந்த ஒண்ணரை வருஷங்களில் ரகுபதி ஒருதரம்கூட பார்த்ததேயில்லை. அதிலெல்லாம் புருஷனும் மனைவியும் வெகு கெட்டி!

வீட்டோடு மாரி என்று ஒரு ஆள் உண்டு. அவனும் கிராமத்திலிருந்து வந்தவன். பரம்பரையாய் சகுந்தலாவின் தந்தை பண்ணையில் வேலை செய்யும் குடும்பத்தைச் சார்ந்தவன். வீட்டை, தோட்டத்தைப் பெருக்குவது, கடை கண்ணிக்குப் போவது, காவலாய் வாசலில் படுப்பது எல்லாம் அவன்தான். மாசத்துக்கொருதரம் சம்பளம் வாங்கின பின் ஒரு சனி, ஞாயிறு மாரி சொந்த ஊருக்குப் போய் பெண்டாட்டி, குழந்தைகளைப் பார்த்துவிட்டு வருவான். மாசா மாசம் அவனுக்கு பஸ் சார்ஜ்



கொடுத்து ஊருக்கு அனுப்புவது தொந்தரவாக இருந்தாலும், மாரி திரும்பி வரும்போது மாமனார் வீட்டிலிருந்து புழுங்கல் அரிசி, இடியாப்ப மாவு, பலகாரம் என்று மூட்டைக் கட்டிக் கொண்டு வருவதால் வரதன் அந்தப் பழக்கத்துக்கு முட்டுக்கட்டை போடுவதில்லை என்பது ஊர் அறிந்த ரகசியம். அவனைத் தவிர, தினம் காலையில் ஒரு வயதான வேலைக்காரி வந்து பத்துத் தேய்த்து, துணி துவைத்துப் போட்டுவிட்டு போய்விடுவாள். மற்றபடி சமையல், இதர வேலைகளைச் செய்வதெல்லாம் சகுந்தலாதான்.

'என் சம்சாரம் சரியான நாட்டுக்கட்டை...எந்தக் காரியத்துக்கும் அஞ்ச மாட்டாள்' என்று வரதன் புளகாங்கிதத்தோடு அடிக்கடி சொல்லுவான்தான்!

புறங்கையைக் கொசு கடித்தது. எழுந்து நின்ற ரகுபதி கூடத்துள் எட்டி கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்தேகால்...தமிழ் சினிமா ஆரம்பிக்கப் போகிறது. இன்னமும் தங்கத்தைக் காணவில்லையே என்ற நினைப்பு எழ, நாற்காலியை உள்ளே இழுத்துப் போட்டு, தானும் வீட்டுக்குள் சென்று கதவைத் தாளிட்டான்.

பிளாஸ்கில் மிச்சமிருந்த அரை லோட்டா காபியைக் குடித்தவன், டி. வி. ஸ்விட்சைப் போட்டுவிட்டு நாற்காலியில் அமர்ந்தான்.

விளம்பரங்களில் புத்தி போகவில்லை. பசித்தது. தங்கம் இருந்தால் ஏதாவது டிபன் பண்ணித் தரச் சொல்லலாம். வெளியே போய் மெயின் ரோடில் இருக்கும் சாந்தா பவனில் சூடாய் ரவா தோசை சாப்பிட்டுவிட்டு வரலாமா என்று எண்ணியவன், தங்கம் வீட்டுச் சாவி எடுத்துக் கொண்டு போயிருப்பாளோ மாட்டாளோ என்ற கேள்வி எழுந்ததும் நினைப்பை மாற்றிக் கொண்டான்.

பாதிப்படம் ஓடி, மணி ஏழானபோது அரக்கப் பரக்க தங்கம் வந்து சேர்ந்தாள். இவன் என்ன, ஏது என்று கேட்கும் முன் தானாக முந்திக் கொண்டு பேசினாள்.

''நாழியாயிடுச்சு... மன்னிச்சுக்கங்க... புறப்படலாம்னு சொன்னா சகுந்தலாக்கா கேட்டாத்தானே! 'இரு, இரு, இன்னும் அஞ்சு நிமிஷம்'னு சொல்லி நேரத்தைக் கடத்திகிட்டே இருந்திட்டாங்க...''

கையிலிருந்த பையை மேஜை மேல் வைத்துவிட்டு, பானையிலிருந்து ஒரு கிளாஸ் தண்ணீரை மொண்டு குடித்தவள், 'ஸ்ஸப்பாடா! என்ன வேர்வை!' என்று முனகியவாறு மின்விசிறியின் வேகத்தைக் கூட்டினாள்.

சமையல் கட்டுக்குப் போய் ஒரு தட்டை எடுத்து வந்து, பையில் வாழை இலையில் சுற்றியிருந்த இரண்டு மைசூர் போண்டாக்களையும் ஒரு அல்வாத் துண்டத்தையும் அதில் வைத்து கணவனிடம் நீட்டினாள்.

''டிபனா? ஏது? ஹோட்டல்ல வாங்கினியா?''

இல்லை என்று மறுத்த தங்கம், ''மங்களத்தம்மா வீட்டுல கொடுத்தாங்க'' என்றாள்.

வாயில் போண்டாவைப் போட்டுக் கொண்டு, 'எந்த மங்களத்தம்மா?' என்று கண்களால் ரகுபதி வினவ, தங்கம் அவனருகில் அமர்ந்து பதில் கூறினாள்.

''மங்களம் ஸ்டோர்ஸ் ஜவுளிக்கடை முதலாளி சம்சாரம் மங்களத்தம்மா...''

போண்டாவை விழுங்கிய ரகுபதி அவசரமாய், ''அவங்க வீட்டுக்கா போயிருந்தீங்க? அந்தம்மாவுக்கும் சகுந்தலாவுக்கும் ஏதோ மனஸ்தாபம்னு சொன்னியே?''

தங்கம் நமுட்டாய் சிரித்தாள்.



''அது போன மாசங்க...இப்ப எல்லாம் சரியாப் போயிடுச்சாம். ஜவுளிக்கடை முதலாளி மகளுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிருக்காம், வர்ற பதினேழாம் தேதி முகூர்த்தமாம். இந்த விவரத்தைத் தெரிஞ்சுகிட்டு சக்கு அக்கா நாலு நாளைக்கு முன்ன மங்களத்தம்மா வீட்டுப்படி ஏறிப்போய் 'என்னவோ உடம்பு சரியில்ல... அதான் இத்தனை நாளும் உங்களப் பார்க்கவராம இருந்தேன், அது இது'னு சமாதானம் சொல்லி தானா வலிய சேர்ந்துகிட்டாங்களாம்! கல்யாண காரியங்கள்ல உத்தாசை பண்ணறேன்னு தினம் அங்க போய் வராங்களாம்! எனக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது. 'ஒரு காரியமா வெளிய போகலாம்'னு சொல்லி, அவங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயி, 'நீதான் மாக்கோலம் மாதிரி வெள்ளைப் பெயிண்டால அழகா கோலம் போடுவியே, இந்தா பெயிண்டும் பிரஷ்ஷும்...சம்பந்தி வீட்டுக்காரங்க வர்றப்போ அழியாத கோலமா வேணும்னு மங்களத்தம்மா ஆசைப்பட்டாங்க...'அதுக்கென்ன, எங்க ராசாத்தி தங்கம் இருக்காளே, ஜமாய்ச்சிடுவோம்'னு சொல்லி உன்னைக் கூட்டிட்டு வந்தேன். வாசல்ல, பூஜை அறைல பெரிய மணைக் கோலமா போட்டுக் குடு'னு கேட்டுக்கிட்டாங்க, மாட்டேன்னு எப்படி சொல்றது? மூணு மணி நேரமா குனிஞ்சு போட்டதுல முதுகு விட்டுப் போச்சு போங்க...''

''அதுக்குக் கூலியாதான் போண்டாவும் அல்வாவும் கொடுத்தாங்களா?''

தங்கம் நிஜமான கோபத்துடன் முறைத்தாள்.

''ச்சீ! நா அத்தனை அல்பம் இல்லீங்க...ஏதோ நம்ம கிட்ட கைத்திறமை இருக்கு, ஒரு நல்ல காரியம் நடக்கறப்போ ஆசைப்பட்டுக் கேக்கறாங்களேனு ஒரு உதவியா நினைச்சுதான் செஞ்சேன். மங்களத்தம்மா அன்பா, 'உன் புருஷனுக்கு எடுத்துட்டுப் போ'னு கொடுத்தாங்க.

மறுக்க முடியலை...ஆனா, வீட்டுக்கு வர்றப்போ சக்கு அக்கா ஒரு வார்த்தை சொன்னாங்க பாருங்க, அதைத் தான் என்னால தாங்கிக்க முடியல...''

கையிலிருந்த காலித் தட்டைக் கீழே வைத்த ரகுபதி, ''அப்படி என்ன சொல்லிட்டாங்க, நீ இப்படிப் பதற?'' என்றான்

தங்கம் முகத்தை அஷ்டக் கோணலாக்கினாள்

''போன வாரம் 'மங்களம் ஸ்டோர்ஸ்' மானேஜரை சக்கு அக்கா சந்திச்சாங்களாம்...அவர்தான் முதலாளி மகளுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிருக்கறதச் சொல் லிட்டு, வேண்டியவங்களுக்குக் கொடுக்கறத்துக்காக நூறு பட்டுப்புடவைங்கள நெய்ய ஆர்டர் கொடுத்திருக்கறதை யும் சொன்னாராம்...''

ரகுபதி 'ப்ச்'சென்று சூள் கொட்டி அவளை மேலே பேச விடாமல் தடுத்தான்.

''நா என்ன கேட்டா, நீ என்ன பதில் சொல்றே?''

''இருங்க...அவசரப்பட்டா எப்படி! அதைக் கேட்டப் பறம்தான் மனசு மாறி இவங்க வலிய மங்களத்தம்மா வீட்டு வாசப்படியேறிப் போயிருக்காங்கனு சொல்ல வந்தா...''

''அடக்கடவுளே! முதல்ல நீ சொன்ன விஷயத்துக்கும் இப்ப சொல்றதுக்கும் என்ன சம்பந்தம்...எனக்குப் புரியலையே!''

''எனக்கும்தாங்க புரியலை...ஆனா, துளி வெக்கம் இல்லாம நாங்க வீடு திரும்பறப்போ 'கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள்கூட இல்ல, தினமும் நாம அவங்க வீட்டுக்குப் போயி இன்னி மாதிரி கோலம் போட, சாமான்களை எடுத்து வைக்கறதுல கூடமாட உதவி னோம்னா நமக்கும் ரெட்டைப் பேட்டுப் போட்ட



பட்டுப்புடவைங்கள கட்டாயம் கொடுப்பாங்க...ஜவுளிக் கடைக்காரங்க, சொந்தமா தறி இருக்கு...அதான் வாறி விடறாங்க ... நூறோட நூத்திரெண்டு, கொடுக் கட்டுமே'னு சொன்னப்போ கழுகுக்கு மூக்குல வேர்த்த மாதிரி சக்கு அக்கா நடந்துக்கறாப்பலதான் எனக்குத் தோணிச்சு!''

கேட்டதை நம்ப மாட்டாமல் ரகுபதி உள்ளங்கையால் ஓங்கி நெற்றி மத்தியில் அறைந்து கொள்ள, தங்கம் தொடர்ந்தாள்.

''இவங்க பணம் காசு இல்லாதவங்களா, இல்ல, ரெட்டைப் பேட்டு போட்ட பட்டுப்புடவையை உடுத்திக் காதவங்களா? ஏன் இப்படி அலையறாங்கனு எனக்கு சுத்தமா புரியலைங்க ... இந்தப் பொங்கலுக்குகூட பொறந்த வீட்டு சீதனத்தோட பட்டுப்புடவைதான் அனுப்பியிருக்காங்க ... அப்புறம் எதுக்கு இத்தனை அல்பத்தனம்! ச்சே! அவங்க பேசினதும் எனக்கு ரொம்ப அசிங்கமாயிடுச்சுங்க!' ஐயோ, சொந்தபந்தம் இல்லாதவங்க கிட்ட புடவை வாங்கிக்கிட்டா எங்க வீட்டுக்காரர் திட்டு வாங்க. நாளைலேந்து நா வரல, தயவு பண்ணி என்னக்கூப் பிடாதீங்க'னு கண்டிப்பா மறுத்திட்டேன். அதுக்கு 'போடி புத்திகெட்டவளே, பிழைக்கத் தெரியாதவளே'னு சொல்லி சிரிக்கறாங்க! ரோஷம், மானம் எதுவும் இல்லாத இவங்கள என்ன செய்யறது!''

பதில் பேசாமல் ரகுபதி அமர்ந்திருக்க தங்கம் எழுந்து நின்றாள்.

''உங்களுக்குப் பசி வந்திடப்போகுது...நா போய் சோறு வடிக்கறேன், கத்தரிக்காயை சுட்டு துவையல் அரைங்சு, ரசம் வெச்சா போதுமாங்க?''

கேட்டுவிட்டு உள்ளே சென்றவள் ஒரு நிமிஷத்தில் அங்கிருந்தே உரக்கப் பேசினாள்.

''மனசு பொறுக்கல...அதான் திரும்பத் திரும்ப சக்கு அக்கா பேச்சே எடுக்கறேன்...வீட்டுக்கு வர்ற வழியில மார்கெட்டுக்குக் காய் வாங்கப் போனோம். அங்க ஒரு கடைல நின்னுகிட்டு தெரிஞ்சவங்க வீட்டுல கல்யாணம் வருது. லிஸ்ட் தரேன். பாத்து அனுப்புவீங்களா?'னு கேட்டுட்டு, அதை சாக்கா வச்சு எல்லாக் காயையும் அடாவடியா பேரம் பண்ணி குறைச்சு வாங்கிட்டாங்க. தெரியுமா? அப்பறம் இன்னொரு கடைல ஒத்த ரூபாய்க்கு இஞ்சி பச்சை மிளகாய் வாங்கிட்டு ஓஸில கொத்தமல்லி கறுவேப்பிலை கொடுத்தாதான் ஆச்சுனு வம்பு பண்ணாங்க...பூக்காரிகிட்ட ஒரு முழம் பூ வாங்கினாக் கூட 'விட்டு நறுக்கு'னு அவங்கூட தகறாரு...ச்சே, ஆனாலும் அல்பங்க...இனாமா யார் என்ன கொடுப்பாங்கனு ரொம்பத்தான் அலையறாங்க! சக்கு அக்காவோட இந்த குணம் எனக்குத் தெரிஞ்சதுதான், புதுசு ஒண்ணும் இல்லே...ஆனாலும் இன்னிக்கு என்னமோ ரொம்பத்தான் பத்திகிட்டு வருது...''

அவள் நீளமாய் பொரும, எழுந்து வந்த ரகுபதி வாசப்படியில் சாய்ந்து நின்று கொண்டு அவளுக்கு பதில் கூறினான்.

''உன் ஆத்திரம் எனக்குப் புரியுது தங்கம். ஏன்னா' பல சந்தர்ப்பங்கள்ல வரதனோட நடவடிக்கைகளைப் பார்த்து நானும் 'என்ன மனுஷன்டா இவன்'னு வெறுத்துதான் போயிருக்கேன். ஆனா, யோசிச்சுப் பார்த்தா இது 'அல்பகுணம்'னு தோணல...இது ஒரு நப்பாசை—ஓஸில சாமான்களை வாங்கிக்கறப்போ வர்ற சந்தோஷம்...வரதனும் அவன் சம்சாரமும் சோம்பேறிகளோ, மனசாகாத கஞ்சன்களோ இல்ல...இன்னும் சொல்லப் போனா, சரியான உழைப்பாளிங்க... அடுத்தவங்கள திருப்தி பண்ணி இனாமா காரியங்கள சாதிச்சுக்கற அதிக சாமர்த்தியசாலிங்கனு இவங்களச்



சொல்லலாமே தவிரவும், நிச்சயமா பிக்காரி குணக்காரங்கனு ஒதுக்க முடியாது.''

பேசிக்கொண்டே அறைக்குள் வந்த ரகுபதி டப்பாவைத் திறந்து முறுக்கொன்றை எடுத்து கடித்தபடியே மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

''அன்னிக்குப் பாரேன், மாடி வீட்டுப் பெருமாள் எங்க ரெண்டு பேர் கிட்டயும்தான் அக்கா பணம் பத்தாயிரம் இருக்குது. அதை நம்பிக்கையானவங்ககிட்ட வட்டிக்கு விட்டா நல்லதுனு சொன்னார். நா அதை இந்தக் காதால கேட்டு அந்தக் காதால வெளியேத்திட்டேன். ஆனா வரதன்? நாயர் பணக்கஷ்டம்னு சொன்னதும் சடார்னு அமுக்கிப் பிடிச்சு, இங்க பதினைஞ்சு வட்டிக்கு வாங்கி அங்க இருவதுக்கு விட்டு, நடுவுல தான் அஞ்சைத் தட்டிக்கலையா? பெருமாள், நாயர் கிட்ட உதவி பண்ணினார்னு நல்ல பேர், இதுக்கு மேல ரெண்டாம் பேர் அறியாம வருமானம். இது கெட்டிக்காரத்தனம் இல்லாம வேற என்ன? கூட இருந்த எனக்கு அப்படி செய்யத் தோணிச்சா? இந்த ஜகஜ்ஜால குணம் புருஷன்கிட்டேயிருந்து மனைவிக்கு வந்திச்சா, இல்ல அவங்ககிட்டேயிருந்து இவனுக்கு வந்திச்சானு தெரியல...பசங்களும் அச்சு இப்படியே இருக்குதுங்க, தெரியுமா தங்கம்! சைக்கிள ஸ்னேகிதன் உபயோகத்துக்குக் கொடுக்கறப்போ பதிலுக்கு அவனை பஞ்சர் ஒட்ட வைச்சு, வண்டிய ஓட்டச்சொல்லி தான் பின்னால உக்காந்துகிட்டுப் போற சாமர்த்தியம் இந்த வயசுலேயே கண்ணனுக்கு இருக்கு ... மொத்தத்துல கில்லாடிக் குடும்பம்! அதான் நா சொல்வேன்.''

கத்திரிக்காயை சுட்டு, தோலை உரித்துவிட்ட தங்கம், ''பெரிய கில்லாடிங்கதான் போங்க...இதுல பெருமைப்பட எதுவும் இருக்கறதா எனக்குத் தோணல...கூட நின்னப்போ உடம்பு கூசிப் போச்சு! நமக்கு வேண்டாம்பா

இந்த உசந்த குணப்!. என்று அங்கலாய்த்துவிட்டு, அரைக்க வைத்திருந்த மசாலாவையும், கத்தரிகாயையும் எடுத்துக்கொண்டு, கொல்லைக் கதவைத் திறந்து அம்மிக்கல்லிடம் செல்ல, பேசியது போதும் என்கிற நினைப்புடன் ரகுபதி கூடத்துக்குச் சென்று இறுதிக் கட்டத்தை நெருக்கிக் கொண்டிருந்த தமிழ்ப்ரூபடத்தைப் பார்க்க முற்பட்டான்.

## 3

இரண்டு நாட்களாக வரதன் ஏக பிஸி.

இருக்கையில் இல்லாமல் இங்கும் அங்கும்ஓடிக்கொண்டேயிருந்தான். ஸீட்டில் உட்கார்ந்திருந்த சமயத்திலும் வாய் ஓயாமல் டெலிபோனில் பேச்சு.

என்ன விஷயம்?

பார்த்து, அரைகுறையாய் ஒரிரு வார்த்தைகளைக் கேட்டவரையில் மலேஷியா. சிங்கப்பூர் என்று ஏதேதோ காதில் விழுந்தனவே தவிரவும் உருப்படியாய் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. வீட்டிலிருந்து காலையில் அலுவலகத்துக்கு ஸ்கூட்டரில் வரும்போது அவன் காதருகில் குனிந்து ''என்ன வரதா ..ரொம்ப பிஸியா இருக்காப் பல தோணுது... என்ன விஷயம்?'' என்று ரகுபதி கேட்டதற்கு சிரித்துக்கொண்டே 'ஆமாய்யா...ரொம்ப பிஸி தான், அப்புறமா எல்லாம் சொல்றேன்'' என்று வரதன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். காற்றின் வேகத்தை மீறிக்கொண்டு உரக்க ''இப்பவே சொல்லு'' என்று கேட்க எப்படியோ இருக்க, ரகுபதி மௌனம சாதித்தான்.



ஆனாலும, செக்ஷன் மானேஜர் முத்துசாமியின் அறைக்குப் போய் அறை மணி போல வரதன் பேசிக் கொண்டிருந்ததும், உணவு இடைவேளை சமயத்தில் ஆடிட்டிங் பிரிவிலிருந்து கோவிந்தனும், நிர்வாகப் பிரிவிலிருந்து சுந்தர்ராஜனும் கூட அவனைத் தேடி வந்து, மேஜைமேல் கவிழ்ந்து உட்கார்ந்து ரொம்ப நேரத்துக்கு என்னமோ பேசியதையும் கண்டபோது என்ன நடக்கிறது இங்கே?' என்றஆர்வம் ரகுபதியை நிமிண்டாமல் இல்லை.

தொடர்ந்து எந்த விவரத்தையும் தெரிந்து கொள்ள முடியாமல் நாலு மணிக்கு இவன் மேஜைக்கே வந்து வரதன், ''நா பர்மிஷன் போட்டுட்டு வெளியே போறேன்ய்யா... நீ பஸ்ஸுல வீட்டுக்குப் போயிடு... நாளைக் காலையிலும் எட்டு மணிக்கெல்லாம் ஒருத்தரைப் பாக்க வரேன்னு சொல்லியிருக்கேன், அதனால நீ எனக்காகக் காத்திருக்காத... வேணும்னா ரெண்டு வேளை பஸ் சார்ஜ் அடுத்த மாசம் பணம் கொடுக்கறப்போ கழிச்சிக்கோ!'' என்று கூறிவிட்டு இவன் பதிலுக்காகக் காத்திராமல் வேகமாய் வெளியே போக, ரகுபதியின் நமைச்சல் அதிகமானது.

வீட்டுக்குப் போகும்போதும், மனைவி கொடுத்த டிபனை சாப்பிடும்போதும் இதே யோசனைதான்.

''வரதன் ஏதோ முக்கியமான காரியத்தை முனைஞ்சு செஞ்சிட்டு இருக்கான் மானேஜர்லேந்து எல்லாசெக்ஷன் ஆபீஸர்ங்களையும் பார்த்து பேசறான்...புரொமோஷன், கிரமோஷன் கிடைக்க பாடுபடறானா? அதுக்கு இத்தனை வெளிப்படையா யாரும் முயற்சி செய்ய மாட்டாங்களே? ''என்ன விஷயம்?'னு கேட்டேன். 'சொல்றேன், உன்கிட்ட சொல்லாமயா?னு' சிரிக்கறான். என்னனு தெரிஞ்சிகிட்டா தேவலை போல இருக்கு'' என்று இருப்புக் கொள்ளாமல் இரவு மனைவியிடம் கூறியபோது அவள் சுவாரஸ்யம் இல்லாமல் ஒரு தரம் அவனை ஏறிட்டுவிட்டு ''எனக்குத்

தூக்கம் வருது'' என்று சொல்லி திரும்பிப் படுத்து விட்டாள்.

மறுநாளும் அதே கதைதான். தவிப்பு அதிகமாக, இவன் கூட வேலை பார்க்கும் நாராயணனிடம் மெது வாய் விசாரித்தபோது, ''உங்களுக்குத் தெரியாதா? நீங்கதான் அவனோட ஆப்த நண்பராச்சே!'' என்று சொல்லிக் காட்டிவிட்டு, ''என்னவோ டூர் ஏற்பாடு பண்றார்னு நினைக்கறேன்'' என்று பட்டும் படாமலும் சொல்லிவிட்டு நகர்ந்து விட்டார்.

இனி பொறுக்க முடியாது என்றானதும் எழுந்து வரதனிடம் சென்றான்.

''என்ன விஷயம் வரதன்? ஆபீஸ் பூரா தெரிஞ்சிருக்கு, ஆனா, நா கேட்டா மட்டும் எதுவும் சொல்லாம பிகு பண்ணிக்கறே!''

ஒரு வெள்ளைப் பேப்ட'ரில் பல பெயர்களையும், ஒவ்வொன்றுக்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட தொகையையும் எழுதி கூட்டிக் கொண்டிருந்ததை முடித்துவிட்டு வரதன் நிமிர்ந்தான். புன்னைகைத்தான்.

''உன்கிட்ட சொல்லக்கூடாதுனு இல்லைய்யா... ஆனா, நேரம்தான் கிடைக்கல... மூணு நாள் டைம்ல முடிக்க வேண்டிய காரியம். அதான் உக்காந்து சோறு தின்னக்கூட நேரம் கிடைக்காம ஓடிட்டு இருக்கேன்...''

''என்னவோ 'டூர்' ஏற்பாடு பண்றேன்னு நாராயணன் சொல்றானே!''

''கரெக்ட்''

ரகுபதி வருத்தத்தோடு நண்பனை ஏறிட்டான்.

'யார்யார்கிட்டயோ 'டூர்' பத்தி பேசற. ஆனா, உன் நெருங்கின நண்பன், என்கிட்ட பேசவேயில்ல பாத்தியா? ஏன், விவரம் சொன்னா நானும் சேர்ந்துக்க மாட்டேனா?'



வரதன் கையிலிருந்த பேனாவை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

''ஸாரிய்யா... நீ அத்தனை செலவு பண்ணி 'டூர்' போக சம்மதிப்பேனு நா நினைக்கல...சரி, இப்பவும் ஒண்ணும் குடிமுழுகிப் போகல...பதினைஞ்சாயிரம் ரூபா செலவழிக்க நீ ரெடினா சொல்லு,உன் பேரையும் லிஸ்டுல சேர்த்திடறேன்...''

ரகுபதி அரண்டான்.

''என்னது! பதினைஞ்சாயிரமா!''

''பத்தியா! இதுக்குதான் உன்னண்டை சொல்லல... காரியத்தைக் கச்சிதமா முடிச்சப்புறம் 'இப்படி செஞ் சேன்ய்யா'னு விளக்கமா சொல்லலாம்னு இருந்தேன்.''

அரை நிமிஷம் அப்படியே நின்று கேட்டதை நம்ப மாட்டாமல் விழித்து, ''பதினைஞ்சாயிரம் எதுக்கு வரதன்?'' என்றான் மெதுவாக.

''இப்பே விலாவாரியா பேச டைம் இல்ல...நீ இன்னிக்கு என்ன பண்ணப்போறே? நேரமாச்சுன்னாலும் பரவாயில்லைனு என்கூட வரியா, இல்ல, பஸ்ல போயிடறியா?''

''எவ்ளோ நாழியாகும்?''

''தெரியாது. மந்தைவெளில ஒருத்தரைப் பார்த்து, இந்த ட்ரிப் விவரம் பேசணும். 'சரியான பார்ட்டி. பிடிச்சிடு'னு மானேஜர் காட்டிக் கொடுத்திருக்கார்''

''யாரு, நம்ப மானேஜரா? அவரும் இந்த ட்ரிப்ல உண்டா?''

''இல்லாம! போணியே அவர்தானே! இப்ப கொஞ்சம்

அக்கௌண்ட்ஸ் செக்ஷன் வரைக்கும் போயிட்டு வரணும். வேலை இருக்கு...நீ பஸ்ல போயிடறியா?''

பதினைஞ்சாயிரம் ரூபாய்க்கு அப்படி என்ன 'டூர் ப்ரோக்ராம்' என்கிற ஆர்வம் கண்களில் வெளிச்சம் போட, ''இல்ல, நாழி ஆனா பரவாயில்ல. உன்கூடவே வரேன்.'' என்றான் ரகுபதி.

ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டு கிளம்பி நேராக மந்தைவெளி விலாசத்தைத் தேடிக் கொண்டு போனார்கள். இரண்டாவது பிரதான சாலையில் இருந்த வீட்டில் நுழைந்து, அழைப்பு மணியை அழுத்தியதும் நாற்பத்தைந்து வயசு மதிக்கத்தக்க ஒரு ஆண் கதவைத் திறந்தார்.

பேண்ட், புஷ் ஷர்ட், வாட்ட சாட்டமான தேகம். காதோர நரை. ''என் பேர் வரதன். நீங்கதானே மிஸ்டர் நடேசன்? எங்க மானேஜர் முத்துசாமிதான் உங்களைப் பார்க்கச் சொன்னார். போன் பண்ணியிருந்தேனே...'

''ஆமாமா...வாங்க...உக்காருங்க...''

அமர்ந்தார்கள்.

''முத்துசாமியும் நானும் பள்ளிக்கூடத்துலேந்து ஒண்ணா படிச்சவங்க...அவன் தனியார் ஆபீஸ்ல சேர்ந்து மானேஜர் ஆயிட்டான் நா சொந்தமா பிஸினெஸ் பண்றேன். ரொம்ப வருஷங்களாவே ஏதாவது வெளிநாட்டுக்குப் போயிட்டு வரணும்னு எனக்கு ஆசை. ஆனா, தொழில விட்டுட்டு இங்க அங்க நகர முடியல. இப்பக்கூட முத்துசாமி இந்தப் பேச்ச எடுத்தப்போ, 'எதுக்குமா வீண் செலவு, கல்யாணத்துக்கு பெண் இருக்கு'னு மறுத்தேன். அவன் விடாம 'நீ வரதன்கிட்ட பேசிட்டு தீர்மானம் பண்ணு நம்ம பிரச்னைகள் என்னிக்கும் தீராது... பொறுப்பு முடிஞ்சுதான் நமக்குனு வாழணும்னா கிழவனானப்புறம்தான் முடியும்'னு ஒரே போடா போட்டுட்டான்!''



நடேசன் சிரிக்க, வரதன் சேர்ந்து கொண்டான்.

''எங்க மானேஜர் சொன்னது ரொம்ப சரி. பொண்டாட்டி. குழந்தைங்க உசத்திதான் ஆனாலும் நமக்குனு ஒரு அனுபவம், சந்தோஷம் சின்னதாவாச்சும் வேணாமா? நாலு ஆம்பிளைங்க சேர்ந்திட்டா தனி குஷிதான். எல்லாத்துக்கும், தாலி கட்டினவங்களும் கூடவே வரணும்னா எப்படிங்க!''

நடேசன் அவசரமாய் முன்னால் சாய்ந்து 'ஷ்...ஷ்' என்று அலனை அடக்கினார்.

''கொஞ்சம் மெதுவா பேசுங்க...நாம இப்படிப் பேசறது என் சம்சாரம் காதுல விழுந்திட்டா, அப்புறம் நான் வெளிநாட்டுக்குப் போறத நினைச்சுக்கூட பார்க்க முடியாது. தொழில விருத்தி பண்ணற விஷயமா சிங்கப்பூருக்குப் போக வேண்டி வரும்னுதான் அஸ்திவாரம் போட்டு வச்சிருக்கேன் ''

வரதன் குழைந்தான். குரலைத் தழைய விட்டான்.

''மன்னிச்சுக்கங்க சார்...உங்க அஸ்திவாரத்துக்கு எந்தக் கெடுதலும் வராது...கட்டடம் எழுப்ப உதவுவேனே தவிர, பிரச்சினை வராப்பல ஒரு வார்த்தை சொல்ல மாட்டேன். எல்லாரும் நல்லா இருக்கணும், மகிழ்ச்சியோடு வாழணும்ன்றதுதாங்க என் ஆசை...''

''சரி, விவரத்தைச் சொல்லுங்க...''

வரதன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

''இங்கயேவா?''

நடேசன் சிரித்தார்.

''இப்ப நீங்க பயப்பட வேணாம் அவங்க கபாலி கோவிலுக்குப் போயிருக்காங்க...திரும்ப ஏழாகும்...

எதிர்காலத்துல நீங்க கவனமா இருக்கத்தான் துவக்கத்திலேயே எச்சரிச்சேன்...''

வரதன் கையோடு கொண்டு வந்திருந்த ப்ரீஃப் கேஸிலிருந்து சில வண்ண அட்டைகளை வெளியே எடுத்தான்.

''என் நண்பர் தாமஸ் புதுசா ஒரு ட்ராவல் ஏஜன்ஸி ஆரம்பிச்சிருக்கார். வாடிக்கைக்காரங்களப் பிடிக்கறத்துக்காக வேற யாருமே கொடுக்காத சலுகைகளத் தர முன் வந்திருக்கார். விமானப்பயணம், தங்கற ஹோட்டல், கேளிக்கை நிகழ்ச்சிகள்னு எல்லாத்துலேயும் வேற எந்த ட்ராவல் ஏஜன்ஸியும் கொடுக்காத அளவுக்குத் தள்ளுபடி தரேன்னு சொல்றார். உதாரணத்துக்கு, இன்னிக்தேதில சென்னை - சிங்கப்பூர் - சென்னை டிக்கெட் விலை ஒம்பதாயிரத்து நானூத்தி சொச்சம். நேரா ஏர்லைன்ஸ்காரங்ககிட்டப் போய் டிக்கெட் எடுத்தா சல்லிக்காசு கொறைக்க மாட்டாங்க...ட்ராவல் ஏஜன்ஸிகிட்ட போனா அவங்களுக்குக் கிடைக்கற ஒன்பது பர்ஸெண்ட் கமிஷன்ல போனாப் போவுதுனு நாலு, இல்ல அஞ்சு பர்ஸெண்ட் நமக்குத் திருப்பி பணமா தருவாங்க ஆனா என் சிநேகிதர்' எட்டு பர்ஸெண்ட் திருப்பித் தரேன்னு சொல்றார். 'என்னங்க இப்படி செஞ்சா உங்களுக்கு லாபம் வேணாமா?'னு கேட்டேன். 'வாடிக்கைகாரர் திருப்திதான் முக்கியம். லாபம் இல்லே'னு சொல்றார். எப்படி!''

மூச்சு விடாமல் வரதன் விஷய ஞானத்துடன் பேச, விமானப்பயணம் பற்றி இவனுக்கு எப்படி இத்தனை விவரங்கள் தெரிந்தன என்று ரகுபதி ஆச்சர்யப்பட்டான்.

''இப்ப முக்கியமான ஒரு சேதி சொல்லப்போறேன். கவனமா கேட்டுக்கங்க...இது இன்னமும் பேப்பர்ல வராத நியூஸ். பத்து நாள்ல வந்திடும். என் சிநேகிதருக்கு டெல்லிலேந்து நியூஸ் வந்திருக்கு...அடுத்த மாசம் பதினைஞ்சாம் தேதிலேந்து விமானக் கட்டணங்கள தாறுமாறா ஏத்தப் போறாங்களாம். சிங்கப்பூருக்கு ஒன்பதாயிரத்து சொச்சமா இருக்கறது பதிமூணாயிரத்து சொச்சமா ஏறப்போவுதாம். இது தவிர, ஹோட்டல், சாப்பாடு, மத்த செலவுங்க... 'உன் நண்பர்கள்கிட்ட இதை எடுத்துச் சொல்லு...' க்ரூட்டுர்' இப்பப் போனாதான் மலிவு...பதினைஞ்சாயிரம் செலவழிக்கறதுக்கு அப்புறம் இருபத்தைஞ்சாயிரம் ஆகும்'னு கரிசனத்தோட சொன்னார். நானும்தான் கேக்கறேன்...நமக்குத் தோட்டத்துலயா பணம் விளையுது? அவனவன் உசிரக் கொடுத்து சம்பாதிக்கறத எதுக்கு அரசாங்கத்துக்கு தண்டமா தூக்கித் தரணும்? என்ன சார் நா சொல்றது?''



நடேசன் எழுந்து கைகளை முன்னால் கட்டிக் கொண்டு இப்படியும் அப்படியும் உலாத்தினார். நின்றார். யோசனையுடன் கேட்டார்—

''போக வர ஒன்பதாயிரத்து சொச்சம், அதுலயும் எட்டு பர்ஸெண்ட் பணமா திரும்பக் கிடைச்சிடும்னு சொன்னீங்க...இப்ப என்னடான்னா பதினைஞ்சாயிரம்னு ஒரே தூக்கா தூக்கிட்டீங்களே!''

வரதன் நட்போடு தலையசைத்து மறுத்து, சிரித்தான்.

''இல்ல சார், அப்படியெல்லாம் அடாவடி செய்யறவன் நா இல்லே...பூரா சொல்லி முடிச்சிடறேன். அப்புறம் சொல்லுங்க...அத்தனை பணம் கொடுத்து சிங்கப்பூர மட்டும் போய் வர்றதை விட என்னைக் கேட்டீங்கன்னா, கூட மூவாயிரம் கொடுத்து மலேஷியா, தாய்லாந்தும் சுத்திட்டு வர்ற ட்ரிப் லாபத்துக்கு லாபம், அற்புதமான அனுபவத்துக்கும் வழி செய்யும்னு சொல்வேன். விமானப்பயணம், ஹோட்டல், ஊர் சுத்திப் பார்க்கறதுனு எல்லாத்தையும் மனசுல வச்சுதான் மொத்தமா பதினைஞ்சாயிரம்னு சொன்னேன். தப்பாங்க?''

நடேசன் முகவாயை சொறிந்தார்.

''பதினைஞ்சாயிரம் ரொம்ப அதிகம் மிஸ்டர் வரதன். பத்தாயிரத்துக்குள்ள முடிச்சிடலாம்னு நா நினைச்சேனே!''

''தாராளமா முடியும் ஆனா, சிங்கப்பூர் மட்டும் தான்; பாங்காக், கோலாலம்பூரை மறந்திடணும். ஆமா, உங்களை ஒண்ணு கேக்கலாமா? சிங்கப்பூர்ல என்ன சார் அப்படி பெரிசா இருக்கு? ஷாப்பிங் பண்ணலாம், ஒத்துக்க றேன். ஆனா, பாங்காக் அனுபவம் வேற எங்கயும் கிடைக்காதுனு நா அடிச்சு சொல்வேன்!''

''பாங்காக்ல அப்படி என்ன உசத்தியா இருக்குனு சொல்றீங்க?''

வரதன் முன்னால் சாய்ந்து உதடுகளை நாவால் ஈரப் படுத்திக் கொண்டான்.

''என்ன இருக்கா? என்னங்க அப்படி கேட்டுட்டீங்க? உலகத்துல முக்கியமா கருதற டூரிஸ்ட் இடங்கள்ல அதுவும் ஒண்ணு. அமெரிக்காலேந்து பிளேன் பிளேனா வந்து அனுபவிச்சிட்டுப் போறாங்க தெரியுமா? தாய்லாந்து பொண்ணுங்க மெழுகு பொம்மை மாதிரி இருப்பாங்க... தாய்லாந்து மஸாஜ் கேள்விப்பட்டதில்ல?''

நடேசன் நாற்காலியின் விளிம்பில் அமர்ந்து 'ம்ஹூம்' என்றார்.

''வேற எந்த நாட்டுலேயும் கிடைக்காத அனுபவம் சார் அது! உடம்புல என்னைத் தடவி தொட்டிக்குள்ள உக்கார வச்சு...''

வரதன் நிறுத்த, நடேசன் கண்களை எதிர்பார்ப்பில் பளபளக்க 'வச்சு?' என்று எடுத்துக் கொடுக்க, ரகுபதிக்கு ரொம்ப சங்கடமாயிற்று.

''எப்படி சார் சொல்றது? அது ஒரு சொர்க்கம்... அனுபவிச்சாதான் புரியும்''

'உனக்கு எப்படித் தெரியும்? நீ போயிருக்கிறாயா?' என்று அதட்டாமல், அவனுடைய வர்ணனையில் நடேசன் மயங்கி உட்கார்ந்திருந்ததைப் பார்த்த ரகுபதிக்கு சிரிக்கத் தோன்றியது அடக்கிக் கொண்டான்.



நடேசன் மறுபடியும் எழுந்து நடக்க முற்பட்டார்.

''அதெல்லாம் சரிதான் மிஸ்டர் வரதன். ஆனாலும் பதினைஞ்சாயிரம்னா...''

''அதிகமேயில்லங்க...நிதானமா கணக்குப் போட்டுப் பாருங்க...மொத்தம் பத்து நாள். மலேஷியால ரெண்டு நாள், பாங்காக்ல மூணு நாள், சிங்கப்பூர்ல மூணு நாள், போக ஒரு நாள், வர ஒரு நாள். ஆக மொத்தம் பத்து நாள். இங்கயிருந்து பெங்களூர் ஒரு நாள் போய் தங்கிட்டு வரணும்னா ஆயிரம் ரூபா ஆயிடுது. மூணு நாடுகளுக்கு போயி பத்து நாள் தங்கி, ஊர் சுத்திப் பாத்திட்டு வர்றதுன்னா சும்மாவா?''

''இருந்தாலும் ......கட்டுப்படியாகுமானு யோசிக் கறேன்...'

''நல்லா யோசனை பண்ணுங்க...பாங்காக் போற துக்கு என்ன வேணா கொடுக்கலாம் சார். நம்புங்க... சொல்ல மறந்திட்டேனே. நடுவுல ஒருநாள் பட்டாயா பீச்சுக்குக் கூட்டிட்டுப் போவாங்க. உலகப் பிரசித்தி பெற்ற கடற்கரை. அங்க வாட்டர் ஸ்கூட்டர், பாரா செய்லிங் எல்லாம் செய்யலாம்...''

'அப்படீன்னா?''

வரதன் கையிலிருந்த வண்ண அட்டைகளை அவர் முன் நீட்டினான்.

''இங்க பாருங்க...இதான் 'பாரா செய்லிங்' பாரா சூட் ஒண்ணை நம்ப முதுகுல கட்டிட்டு, மோட்டார் பட கோட நீளமான கயறு மூலம் இணைச்சிடுவாங்க...படகு கடல்ல வேகமா போகப்போக, நாம பறவை மாதிரி ஆகாயத்துல பாராசூட் உதவியோட பறப்போம். கேக்கவே 'த்ரில்' லிங்கா இல்லே?''

நடேசன் கண்களை மூடி உடம்பை சிலிர்த்தார்.

''பயமா இருக்கு!''

''அப்ப சரி, அது வேணாம்...தரைல விடற மாதிரி கடல்ல ஸ்கூட்டர் விடலாம். பயமே இல்ல, இங்க பாருங்க...''

அவன் நீட்டிய படத்தில் கையகல நீச்சல் உடை அணிந்த பெண்கள் ஏராளமாய் தென்பட, நடேசன் அசட்டுத்தனமாய் சிரித்தார்.

''இது நல்லாதான் இருக்கு.''

''இதைவிட ஆயிரம் மடங்கு போல 'கிக்' கிடைக்கும் சார், நம்புங்க. சாயங்கால வேளைல விதவிதமா கிளப்புக்கு அழைச்சிட்டுப் போய் 'பலானஷோ' வெல்லாம் காட்டுவாங்க...நீங்க கனவுல கூட கற்பனை செய்யத் துணியாத காட்சியெல்லாம் பார்த்து ரசிக்கலாம், மொத்தத்துல செமை கிளுகிளுப்பு சார்''

நடேசனின் பலவீனம் என்ன என்பது புரிந்து, ஆணி மண்டையில் சுத்தியலால் ஓங்கி அடிப்பது போல, ஒரே பாயிண்டில் தொடர்ந்து வரதன் விற்பனைப் பேச்சைத் தொடர, ஆசாமி டமாரென்று விழுந்தார்.

''நீங்க இவ்வளவு சொல்றப்போ ஒருநடை போயிட்டு வர்றதுதான் சரினு படுது...அதுவும் அடுத்த மாசத்து 'ரேட்' எல்லாம் எக்கச்சக்கமா ஏறப் போகுனு வேற பயமுறுத்தறீங்க...''

''பயமுறுத்தலீங்க...எங்கம்மா சத்தியமா உண்மை தான், இப்ப பாக்கி விவரத்தையும் சொல்லிடறேன்... கோலாலம்பூர், பாங்காக், சிங்கப்பூர் போய்வர டிக்கெட் சார்ஜ் பன்னிரண்டாயிரத்து இருநூறு ஆகும். இதுல எட்டு பர்ஸென்ட் திரும்ப உங்களுக்குப் பணமா கொடுத்திடுவாங்க...பத்து நாள் ஹோட்டல், போக்குவரத்து மூவாயிரத்து ஐநூறு இது தவிர, நீங்க .',பாரின் எக்ஸ்



சேன்ஜ் எடுத்ததும் அதிலேந்து நூத்தியிருபது டாலர் கொடுத்திடணும், எல்லா ஏஜன்ஸியும் இருநூறு வாங்கு வாங்க. ஆனா என் ப்ரெண்டுக்கு அப்படி கறாரா இருக்கப் பிரியமில்ல. 'இருக்கற வெளிநாட்டுப் பணத்த நாம வாங்கிகிட்டா அப்பறம் ஷாப்பிங் செய்ய அவங்க எங்க போவாங்க'னு அக்கறையோட கேட்டார். ரொம்ப வேண்டப்பட்டவங்களுக்கு அவர் இன்னொரு உதவி கூட செய்யறார், இங்க இந்திய ரூபாயக் கட்டிட்டீங்கன்னா, வெளிநாட்டுல உங்களுக்கு உபரி டாலர் கிடைக்கக்கூட அவர் வழி செய்யறார். பெரிய மனுஷன், நாலு நாட்டுல வியாபாரம் செய்யறவர். அதனால மத்த ஏஜன்ஸிக்காரங்களால முடியாத சில விஷயங்கள் இவரால செய்ய முடியுது.''

வரதனுடைய வியாபாரத் திறமைக்கு, அன்றைக்கு நூற்றுக்கு நூறு வெற்றி. நடேசன் தான் மட்டுமல்ல தன் பார்ட்னர் கதிர்வேலையும் ரூக்குக் கூட்டி வருவதாகச் சொல்ல, மீண்டும் சந்திப்பதாகக் கூறி விடை பெற்றார்கள்.

வரதன் செமை 'மூடில்' இருந்தான்.

ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்து, அதை ஸ்டார்ட் செய்யும் முன் ''நேரா விட்டுக்குப் போகணுமா:ய்யா?'' என்றான் உற்சாகமாய்.

''போகாம? மணி இப்ப என்ன தெரியுமா? ஏழரை!''

வரதன் உதடுகளைக் குவித்துக் கொண்டு விசில் அடித்தான்.

''நேரமோ ஆயிடுச்சு. இனிமே சான் போனா என்ன முழம் போனா என்ன! பேசாம அடையார் உடுப்பி

ஹோட்டலுக்குப் போயி ஸ்வீட்டோட டிபன் சாப்பிட்டுட்டுப் போலாமா?''

''ஸ்வீட்டா? கொண்டாடற மாதிரி இப்ப என்ன நடந்திருக்கு?''

வரதன் கண்களை சிமிட்டி சிரித்தான்.

''ஐயாவோட மச்சம் வேலை செய்யுது, வேற என்ன! பேசியவன் ரகுபதியின் ஆமோதிப்புக்காகக் காத்திராமல் ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு குறிப்பிட்ட ஹோட்டலுக்கு முன் வந்து நிறுத்தினான்.

''செலவு வச்சிடுவேனோனு பயப்படாதே...இன்னி டிபன் என் கணக்கு, வாய்யா...''

உள்ளே சென்று அமர்ந்தார்கள்.

குலாப்ஜாமூன், மசால் தோசை, காபிக்கு ஆர்டர் கொடுத்த வரதன் விரல்களால் மேஜைமேல் தாளம் போட, ''விஷயத்தைச் சொன்னா நானும் சேர்ந்து சந்தோஷப்படுவேன் இல்ல...'' என்றான் ரகுபதி.

''நடேசன் சொன்ன வார்த்தையக் காப்பாத்தினார்னா, என் வேலை முடிஞ்சிடுச்சிய்யா...மூணு நாள்ல, எண்ணி மூணே மூணு நாள்ல, பதினைஞ்சு பேரை 'க்ரூப் டூரு'க்கு சேர்த்திட்டேன், ஹாய்...நினைக்கவே பெருமையா இருக்குய்யா...''

அவன் எதற்காக அத்தனை குதிக்கிறான் என்பது விளங்காததால் ரகுபதி சும்மா இருந்தான்.

வரதன் குனிந்து கிட்டத்தில் வந்து சிரித்தான்.

''புரியலையா? சரி, வெவரமா சொல்றேன் கேட்டுக்கோ. என் ஃப்ரெண்ட் தாமஸ் ட்ராவல் ஏஜன்ஸி ஆரம்பிச்சிருக்கிறதா சொன்னேனே, அவன் நாலு நாள் முன்னால 'பதினைஞ்சு பேரை க்ரூப்' ட்ராவலுக்குப் பிடிச்சுக் கொடுத்தேன்னா, நீ இலசவமா வெளிநாடுகளுக்குப் போகலாம். அப்படி ஒரு ஏற்பாடு எல்லா விமானப் போக்குவரத்துக் கம்பனிகள்கிட்டயும் இருக்கு'னு சொன்னான். பதினைஞ்சு டிக்கெட்டுக்கு ஒண்ணு ஃப்ரீ! ஏன் முயற்சி பண்ணக் கூடாதுனு தோணிச்சு... முனைஞ்சேன்...விடாமுயற்சி வெற்றி தரும்! பெரியவங்க சொல்லியிருக்காங்க... தந்திடுச்சு!''



கைக்காசு ஒரு பைசா செலவழிக்காமல் மூன்று நாடுகளுக்கு ஜாலியாக வரதன் போய் வரப் போகிறான் என்ற சேதி ரகுபதிக்கு மலைப்பைத் தந்தது. அடிவயிற்றில் தலை தூக்கிய பொறாமையைத் தட்டி உட்கார வைத்துவிட்டு, பெருமிதத்தோடு நண்பனின் கையைப் பற்றி பலமாகக் குலுக்கினான்.

''பாராட்டுக்கள்! என்ன இருத்தாலும் உன் சாமர்த்தியம் யாருக்கும் சுட்டுப்போட்டாலும வராது...எத்தனை கெட்டிக்காரத்தனமா அந்தாள்கிட்ட பேசினே...ஆமா, இந்த விவரமெல்லாம் எப்ப வரதா கத்துகிட்டே?''

''நாலு நாள் முன்னால தாமஸ் பேசினப்போ சொன்னான். கேட்டதை ஒப்பிச்சேன், இது என்ன பெரிய விஞ்ஞான பாடமா புரியாம போறதுக்கு! இப்ப நா பேசி நீ கேட்டதை இன்னொருத்தர் கிட்ட சொல்லுனா சொல்ல மாட்டியா! அல்ளோ ஸிம்பில் விஷயம்பா இது!''

''என் மரமண்டைக்கு எல்லாமே கஷ்டமான காரியமாத்தான் இருக்கு. எப்பப் புறப்படப் போறீங்க?'!

டிபன் வந்தது. சாப்பிட்டுக் கொண்டே வரதன் பதில் கூறினான்.

''எல்லாருக்கும் பார்ஸ்போர்ட் இருக்காது. அதுக்குதான் நாளாகும். அடிச்சுப் பிடிச்சு ஒரு மாசத்துல

வாங்கிடலாம்னு தாமஸ் சொன்னான். அத செஞ்சிட்டா நாலு நாள்ல விசா வாங்கிட்டுக் கிளம்பிடலாமாம்.''

குலாப்ஜாமூனைத் தின்று முடித்த ரகுபதி யோசனையுடன் வினவினான்.

''பதினைஞ்சாயிரம்ன்றது அவ்வளவு சுலபமா புரட்டக்கூடிய தொகை இல்லியே வரதா? உன்கிட்ட வாக்கு கொடுத்த எல்லாரும் தப்பாம பணத்தைத் தந்திடுவாங்கனா?''

''தந்தாதான் டிக்கெட் கொடுப்பாங்க... ஏமாத்திடுவாங்கன்ற பயம் இல்ல...ஆனா. கடைசி நிமிஷத்துல வரலைனு காலை வாரிவிட்டாங்கன்னா இன்னொரு ஆள் தேடணும். அதான் கஷ்டம். அதுவும் பெரிய ப்ராப்ளமா தோணலைய்யா... மூணு நாள்ல பதினைஞ்சு பேரைப் பிடிச்சவனுக்கு அது ஒன்றும் குதிரைக் கொம்பு இல்ல!''

''எல்லாரும் கையில பணத்தை ரெடியா வச்சிருப்பாங்கன்னா சொல்றே?''

வரதன் பலமாய் தலையசைத்து ஆட்சேபித்தான்.

''எங்கே? நம்ம ஆபீஸ் சுந்தர், மகேஷ், கோபி—எல்லாரும்கூட பி.எஃப். ல லோன் போடப்போறாங்க. இதுல ஒரு விஷயம் என்னன்னா, அவனவன் வீட்டுல உண்மையச் சொல்லாம மறைக்கணும்னு பாக்கறான். வீட்டுல தெரிஞ்சா, 'பசங்க இருக்காங்க. மேல மேல செலவு வருது...இப்ப என்னத்துக்காக இத்தனை பணம் கொடுத்து வெளிநாட்டுக்குப் போகனும்'னு சண்டை பிடிப்பாங்களாம். அதனால 'ஆபீஸ்லேந்து வேலை விஷயமா அனுப்பறாங்க', இல்லாட்டி 'ஆபீஸ்ல நல்லா வேலை செஞ்ச சில பேரைத் தேர்ந்தெடுத்து பரிசுகொடுக்கற மாதிரி வெளிநாட்டுக்கு அனுப்பறாங்க'னு ஏதாவது டுப் விட்டுட்டு, கடன் வாங்கிட்டுத்தான் பாதி பேருக்கு மேல வராங்க... என்ன, நீயும் வரியாய்யா?''



கண்ணைச் சிமிட்டிக்கொண்டு வரதன் வினவ, ரகுபதி முகத்தைச் சுளித்து ''அந்த ஆசையெல்லாம் எனக்கு இல்ல'' என்றான்.

''ஒரு விதத்துல இப்படி ஆசையெல்லாம் இல்லாம இருக்கறது நல்லதுதான்ய்யா... தாமஸ் சொன்னான், பதினைஞ்சாயிரத்தோட செலவு நிக்காதாம். க்ருப் டூர்ல போறவங்களுக்கு அங்கங்க தங்க வசதியும், காலைல சிற்றுண்டி மட்டும்தான் ஏஜென்ஷில பொறுப்பு எடுத்துப்பாங்களாம். மத்தபடி மதிய, இரவு சாப்பாட்டுச் செலவு தனிப்பட்ட முறைல செஞ்சுக்க வேண்டியதுதானாம். வாங்கற ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் பாதிக்குமேல இதுக்கே போயிடுமாம்...பத்துநாள் 'டூர்'னா சும்மாவா!''

பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது மணி எட்டரை!

''எல்லாரும் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கற வரைக்கும் வெளிய விவரம் எதுவும் தெரிய வேணாம். பொறாமைப் புடிச்சவங்க யாராச்சும் டூர்ல வரத் தீர்மானம் பண்ணியிருக்கறவங்ககிட்ட இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி மனசக் கலைக்கப் பார்க்கலாம். இல்லாட்டி வீட்டுல கோள்மூட்டி, பிரயாணத்தத் தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம். அதனால, நா சொன்ன அத்தனை சேதிகளும் உன்னோட மட்டும் இருக்கட்டும், என்னய்யா?'

சரி என்று தலை ஆட்டிவிட்டு வீட்டில் இறங்கிய பிறகு யாரிடமும் சொல்ல மாட்டேன் என்ற வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக தங்கத்திடம் கூட எதையும் வெளியிடாமல் வாயை இறுக மூடிக் கொண்டாலும், கூட வேலை பார்க்கும் நண்பன் தன் அதி சாமர்த்தியமான நடத்தையால் இலவசமாக வெளிநாட்டுக்குப் போகத் தயாராகும்போது தான் மட்டும் எதற்கும் லாயக்கில்லாமல் வேலை உண்டு, சம்பளம் உண்டு, எளிமையான வாழ்க்கை உண்டு என்று வாழ்ந்து கொண்டிருப்பது குறித்து ரகுபதிக்கு ரொம்ப அவமானமாகவே இருந்தது.

## 4

என்னதான் மூச்சு விடாமல் ரகுபதி வாயை இறுக மூடிக்கொண்டிருந்தாலும், நிறை மாச கர்ப்பத்தை மறைக்க முடியாது என்பது போல, சில நாட்கள் போவதற்குள் அலுவலகம் முழுவதும் 'க்ரூப் டூர்' பற்றின பேச்சு எக்கச்சக்கத்துக்கு பரவிப் போயிற்று. டூரில் போவதற்காகப் பெயர் கொடுத்தவர்கள் விவரத்தை வெளியிட்டார்களா, அல்லது வரதனே சொன்னானா, தெரியாது. மொத்தத்தில் காண்டீனில், லிஃப்டில், வரவேற்புக் கூடத்தில் என்று எங்கு இரண்டு நபர்கள் சந்தித்துக் கொண்டாலும், உரையாடல் 'க்ரூப் டூரை'யே சுற்றி வந்தது.

''இந்த மாதிரி மலிவான ரேட்ல பாங்காக் வரைக்கும் போயிட்டு வர்றது நடக்கவே நடக்காதாம். எங்க பக்கத்து வீட்டுக்காரர் போன வருஷம் சிங்கப்பூர் மட்டும் போயிட்டு வந்தார். இருபதாயிரம் ரூபாய் சவரம்! 'எங்க ஆபீஸ்காரங்க பதினைஞ்சாயிரத்துக்கு மூணு நாடுகளுக்கு பத்து நாள் டூர் போறாங்க'னு சொன்னேன், மனுஷன் நம்பமாட்டேனுட்டார்! 'அங்க ஹோட்டலுக்கே தினத்துக்கு நூறு டாலர் கொடுக்கணும் சாப்பாட்டுக்கு தனியா ஒரு நாளைக்கு முப்பது டாலர் ஆகும், எப்படி சார் கட்டுப்படியாகும்'னு எதிர் கேள்வி கேக்கறார்!''

''நான் கேள்விப்பட்டவரைக்கும் வரதன் ஏற்பாடு பண்ணியிருக்கற டூர் ரொம்ப 'சீப்'தான். இந்த விவரமெல்லாம் முன்கூட்டியே தெரிஞ்சிருந்தா, கடனை உடனை வாங்கி நாமளும் பேர் கொடுத்திருக்கலாம். 'இப்ப முடியுமா?'னு வரதனைக் கேட்டேன். 'இனி அடுத்த ட்ரிப் மூணு மாசம் கழிச்சுதான்'னு சொல்லிட்டான். டெஸ்பாட்ச் கிளார்க் ராஜாமணிக்கு அடிச்ச



அதிர்ஷ்டம் நமக்கு அடிக்கலையே! பேர்தான் ஆபீஸர், எதுக்கும் வழியில்ல!''

''ராஜாமணி ஒண்டிக்கட்டை. கிளார்க்கா இருந்தாலும், மாச சம்பளத்துல பாதிய அப்படியே சேர்க்கறான். அவன் போறத்துக்கு என்ன! குண்டு கோவிந்தன் போறான் பாரு. அதான் எனக்குத் தாங்கல...தொந்திய வச்சுகிட்டு ரெண்டடி நடக்க முடியாது. இவனுக்கெல்லாம் பாங்காக்! ஹூம்!''

''ஒருத்தன்கூட பொண்டாட்டிய அழைச்சுகிட்டுப் போகலியா?''

''பொண்டாட்டியா? ஐயோ...எந்த மடையனாவது பாங்காக்குக்கு, தாலிகட்டினவளை அழைச்சிட்டுப் போவானா! போனா என்னத்தை ரசிக்க முடியும்!''

''சரி, வேணாம்...நம்ப ஆபீஸ்ல வேலை பாக்கற லேடீஸ் யாரும் 'டூர்' போக விரும்பலையா? ஒரு பொம்பளைப் பேரைக்கூட லிஸ்டுல காணோமே!''

''இது பத்தி வரதன் கிட்ட கேட்டேன் 'லேடீஸைக் கூட்டிகிட்டுப் போறது பல அவஸ்தைகளுக்கு இடம் கொடுக்கும். சகட்டு மேனிக்கு எந்த எடத்துக்கும் போக முடியாது. தலை நிமிர்ந்து 'பலான ஷோ'லை ரசிக்க முடியாது! எதுக்கு வம்பு'னு சொன்னாரு...''

''பதினைஞ்சு டிக்கெட்டுக்கு ஆள் சேர்த்தா ஒரு டிக்கெட் இலவசமாம்! வரதன் அப்படித்தான் ஓஸில போப்போறான்...தெரியுமா உனக்கு?''

''வரதன் குணம் தெரிஞ்சவங்களுக்கு அவன் காசு கொடுத்து போறதுதான் அதிசயம்! இப்படி ஓஸில போறது இல்ல!''

''எதை ஓஸினு சொல்றீங்க? நாய் படற பாடு பட்டு, அத்தனை பேரையும் பார்த்து, பேசி, தன் பேச்சால

வரதன் சம்மதிக்க வக்கக் கொண்டுதான் இந்த டூ போறதே சாத்தியமாச்சு. வரதன் செஞ்ச வேலைக்கு கிடைச்ச கூலினு கௌரவமா சொல்றதைவிட்டுட்டு, ஓசி கிலினு நீங்க அவனை மட்டம் தட்டறது சரியா?''

''ஏய்...ஏய்...இங்க பார்றா, இவனுக்கு வர்ற கோபத்தை! ஏன் மச்சான், சிங்கப்பூர்லேந்து ஏதாச்சும் உசத்தியா வாங்கிட்டு வரேன்னு வரதன் சொல்லியிருக்கானா, அதான் அவனுக்காக வரிஞ்சு கட்டிட்டு வரியா?''

''இருப்பா...நமக்குள்ள மோதல் எதுக்கு? எனக்கு என்ன கவலைனா, ரொம்ப மலிவா 'டூர்' ஏற்பாடு பண்ணறேன்னு சொல்லி, ஏற்பாடுகள் சரியா செய்யாம ஏமாத்திடுவாங்களோனு பயமா இருக்கு. மானேஜர் கிட்டப் போய் எச்சரிக்கலாம்னா 'டூருக்கு வராத பொறாமைல இல்லாததையும் பொல்லாததையும் சொல்றான்'னு நினைச்சுடுவாரோன்னு தயக்கமா இருக்கு.''

''எதனால உங்களுக்கு இந்த பயம் சார்?''

''என் மச்சான் இப்படித்தான் ஒரு தரம் க்ரூப்ல போறேன்னு போனான். சிங்கப்பூர்ல ஹோட்டல்ல எறக்காம சிரங்கூன் ரோடுல இருந்த பெட்டிக்கடை மாதிரியான லாட்ஜ்ல எறக்கிட்டாங்களாம் பொது பாத்ரூம். ரொம்ப சாதாரண அறை. என் மச்சானுக்கு ஏண்டா வந்தோம்னு ஆயிடுச்சாம். வழக்கமா கடத்தல் செய்றாங்க பாருங்க, அவங்கதான் மலிவா டிக்கெட் எடுத்துகிட்டு, இந்த மாதிரி லாட்ஜ்ல தங்குவாங்களாம். காலை பிளைட்ல போயிட்டு, சாமான்கள வாங்கிகிட்டு, ராத்திரி திரும்பற வரைக்கும் பெட்டிய வைக்க ஒரு எடம் வேணும். வேற எந்த வசதியும் அவனுக்கு வேணாம். மலிவு, மலிவுனு சொல்லி கழனிப்பானைல கைவிட்ட மாதிரி இப்படி ஏதாச்சும் நடந்திடக் கூடாதுன்றதுதான் என் கவலை.''



''விடுங்க...போறவங்க இல்ல அதப்பத்தி கவலைப் படணும். நமக்கு எதுக்குப் பொல்லாப்பு!''

ஆளாளுக்குப் பேசினார்கள். பொறாமையோடு, ஆற்றாமையோடு, சந்தேகத்தோடு தலைக்குத் தலை இஷ்டம் போல விமர்சனம் செய்தார்கள். இவற்றில் சில வரதனின் காதுகளுக்கே வந்தன, பல வராமல் நழுவின. ஆனால் அவன் எதற்கும் அலட்டிக் கொள்கிற மாதிரி ரகுபதிக்குப் படவில்லை. பதினைந்து நபர்களிடமிருந்தும் பணத்தை வசூல் பண்ணிக் கொடுப்பது மட்டும்தான் பொறுப்பு என்பதுபோல தீவிரமாய் செயல்பட்டவன், அதன் பிறகு கவனிக்க வேண்டிய விவகாரங்களை தாமஸ் கையில் ஒப்படைத்து விட்டு என் வேலை ஆயிற்று என்பது போல கையைத் தட்டிக்கொண்டு நகர்ந்து விட்டான்

ஒரு தரம் டிபார்ட்மெண்டில் வேலை செய்யும் காவேரி, ஜீனத், மாசிலாமணி மூவரும் அசட்டுச் சிரிப்புடன் வரதனை நெருங்கி, 'சிங்கப்பூர்லேந்து எனக்கு டைகர் பாம் வேணும், எங்கம்மா கால் குடைச்சல் அது ஒண்ணுக்குத்தான் கேக்கும்' என்றும், 'பாதாம் பருப்பு ரொம்ப சீப் சார், ஒரு கிலோ வாங்கிட்டு வர முடியுமா?' என்றும், 'மலிவா இருக்கற ரெண்டு டீ ஷர்ட் வாங்கிட்டு வர முடியுமா? சார், உங்க சைஸ்தான்' என்றும் கேட்டுக் கொண்டபோது அவன் துளி தயங்காமல் 'அதுக்கென்ன வாங்கிட்டு வந்தா போச்சு' என்று சர்வ அலட்சியமாய் சொல்ல, கூட நின்று அத்தனையும் கவனித்த ரகுபதி தயக்கத்துடன் கேட்டான்.

''இப்படி யார் எது கேட்டாலும் 'சரி'னு உடனே ஒத்துக்கறது உனக்குக் கஷ்டமா இருக்காது? உன் குடும்பத்துக்கும் வேண்டப்பட்டவங்களுக்கும் சாமான்கள் வாங்க வேணாமா? அதுக்கு டாலர் தேவைப்படறதோடே,



19627
3585418

எடுத்துகிட்டு வர்றதும் பிரச்னை இல்லையா? பெட்டியோட எடை இருபது கிலோவுக்கு மேலே இருந்தா உபரியா பணம் வாங்கிடுவாங்கனு நீதானே சொன்னே?"

வரதன் சிரித்தான்.

"வாயால சரினு சொல்றதுக்கு காசா, பணமா?"

"புரியல..."

"போறப்போ பார்த்துக்கலாம்னு அர்த்தம்!"

"மறுபடி புரியல..."

வரதன் கண்களை சிமிட்டினான்.

"புரியாட்டி ரொம்ப நல்லது. நீ போய் உன் வேலையப் பாருய்யா...தானா விளங்கும்!"

விளங்கியது.

டூர் புறப்பட்ட தேதி குறித்து, அதற்கு இரண்டு வாரங்கள் இருக்கையில் நாராயணன் ரகுபதியிடம் வந்து குசுகுசுத்தான்.

"வரதன் டூர்ல போகல தெரியுமா?"

"என்னது?"

"நிஜமாத்தான் சொல்றேன்."

ரகுபதி 'ப்ச்' சென்று அலுப்புடன் சூள் கொட்டினான்.

"வேலை நேரத்துல இது என்ன வெளையாட்டு நானா! இந்த ஃபைல நா இப்ப முடிச்சாகணும்....ஆளை விடு."

"மானேஜர் ரூமுக்கு டிக்டேஷனுக்குப் போயிருந்தேன். அங்க அவரும் வரதனும் பேசிக்கிட்டதை இந்தக் காதால கேட்டேன்,"



"என்னனு?"

"வரதன் வரப்போறதில்லை. அவர் சம்சாரத்துக்கு உடம்பு சரியில்லையாம். அதனால அவர் டிக்கெட்டை மானேஜர் தன் தம்பிக்கு வாங்கிக்கறார்."

நாராயணன் சொன்னது நிஜம்தான் என்பது மாலையில் உறுதியாயிற்று.

ஸ்கூட்டரில் வீட்டை நோக்கிப் பயணித்த சமயத்தில் முன்னால் குனிந்து சத்தலாய் ரகுபதி கேட்டான்,

"நீ டூர் போப்போறதில்லேனு கேள்விப்பட்டேனே, நிஜமா?"

வரதன் கொஞ்சமாய் தலையைத் திருப்பி அவனை ஏறிட்டுவிட்டு,மறுபடி பார்வையை சாலையில் வீசினான்.

"சொன்னது யாரு?"

"யாரோ...உண்மையா இல்லையா, அதச் சொல்லு மொதல்ல."

அடையாறு பிரிட்ஜைத்தாண்டி, ஆவின் பூங்கா எதிரில் பிளாட்பாரத்தை ஒட்டி வரதன் வண்டியை நிறுத்தினான்.

"எறங்குய்யா...உள்ளாரப் போயி பேசலாம்" என்றான்.

ஆளுக்கொரு கப் ஐஸ்க்ரீம் வாங்கிக் கொண்டு, மரத்தடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

"இப்பக் கேளு, என்ன தெரியணும்?"

"அதான் ஏற்கனவே கேட்டுட்டேனே வரதா..."

வரதன் கொஞ்சம் ஐஸ்க்ரீமை சாப்பிட்டுவிட்டு 'ஆம்' என்று தலையசைத்தான்.

''ஏன் போகல?''

''போகப் பிடிக்கல.''

''வெளையாடாத வரதா...''

''இதுல வெளையாட என்ன இருக்குய்யா...டூர் பேச்சு எடுத்து ஆளுங்கள க்ரூப்ல சேர்க்கறப்பலே எனக்குத் தெரியும் நா போப்போறதில்லேனு!''

''இலவச டிக்கெட் கிடைக்கறதுன்றதுக்காக அத்தனை பாடுபட்டுட்டு, இப்ப போகலைனு சொன்னா, அந்த உழைப்பு வீண்தானே! யோசிக்காம எதையோ செஞ் சுட்டு, பத்தாததுக்கு துலக்கத்துலேந்தே நா போறதா இல்லேனு ஏதோ நொண்டி சாக்கு வேற சொல்றியே?''

அவன் கோபத்தை ரசிக்கிறமாதிரி வரதன் தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரிக்க, ரகுபதி முறைத்தான்.

''சிரிக்காத எனக்கு எரிச்சல் அதிகமாகுது! போகாத துக்கு உன் சம்சாரத்துக்கு உடம்பு சொகமில்லைன்றதைக் காரணமா சொல்லியிருக்கியாமே! என்னய்யா அக்கிரமம் இது! அவங்க நல்லாதானே இருக்காங்க! நேத்துகூட அவங்களும் தங்கமும் மாம்டலம் கடைங்களுக்குப் போயிட்டு வந்தாங்களே! என்னத்துக்காக இப்படி இல்லாததையும்பொல்லாததையும் சொல்றே! உன்னோட நெருக்கமா பழகறவன்னு பேர்தான், உன் போக்கை என்னால துளிக்கூட புரிஞ்சிக்க முடியலை...''

வரதன் காலி பேப்பர் கோப்பையை அருகிலிருந்த குப்பைத் தொட்டியில் குறிபார்த்து வீசினான். கையை நீட்டி ரகுபதியின் தொடையை, அவனை சமாதானப் படுத்தும் விதமாகத் தட்டிக் கொடுத்தான்.

''அடேங்கப்பா, என்ன கோபம் வருதுய்யா உனக்கு! நீ கோவப்படராப்பல ஒண்ணுமே நடக்கல... அதை முதல்ல நம்பு... என்ன பிளான் பண்ணி அப்படி நடந்து



கிட்டேன்னு உனக்கு தெரிஞ்சா நீ சந்தோஷப்படுவே... நிச்சயமா... சரி, உன் ஒவ்வொரு கேள்விக்கா பதில் சொல்றேன். 'இலவச டிக்கெட்டுக்காக உழைச்சிட்டு போகலைனா அத்தனை சிரமமும் வீண் இல்லியா?'னு கேட்டே. இல்லே. வீணாப் போனாத்தானே?... நா போகாட்டி என்ன? என் டிக்கெட்டை இன்னொருத்த ருக்கு வித்திட்டா எனக்குப் பத்தாயிரத்து ஐநூறு ரூபா சொளையா கிடைக்குதே. அது பெரிசில்லையா? இங்க பாரு...''

பக்கத்திலிருந்த ப்ரீ.·கேஸை எடுத்து லேசாய் திறந்துக் காட்ட, கட்டாய் நூறு ரூபாய் நோட்டுக் களைப் பார்க்க முடிந்தது.

''ட்ரிப்ல போயிருந்தா இந்த பணம் கிடைச்சிருக் காதுன்றதோட, கைப்பணமும் ஏழெட்டாயிரம் செலவ ழிஞ்சிருக்கும், இல்லே? முள்ளங்கிப்பத்தையாட்டம் பத்தா யிரத்து ஐநூறு' மூனு நாள் உழைப்புக்குக் கிடைச்ச கூலி! எவன் கொடுப்பான் இத்தனை! பசங்க சொந்தமா 'விடியோ டெக்' வேணுன்னு கேட்டுகிட்டு இருக்காங்க... கூட ரெண்டாயிரம் போட்டேன்னா வெளிநாட்டு வி.சி. ஆர். வாங்கிடலாம். எப்படி ஐடியா!''

ரகுபதி பதில் கூறாமல் அவனை வெறித்தபடி உட் கார்ந்திருந்தான்.

அடுத்தது சகுந்தலாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னது... ஆமாம், சொன்னேன்தான். பொறுத்த மான காரணமா சொல்லாட்டி மத்தவங்க 'என்னடா நமக்கு செலவு வச்சிட்டு இவன் கழண்டுகிட்டான்'னு கோபப்படலாம். எதுக்கு வம்பு! அதான் 'என் சம்சாரத் துக்குத் திட்டுக் கோளாறு. எந்த நிமிஷமும் ஆபரேஷன் செய்ய வேண்டி வரலாம்னு டாக்டர் சொன்னா. எப்படி விட்டுட்டுவர்றது!'னு முகத்தைப் பரிதாபமா வச்சுகிட்டு சொன்னேன், எல்லாரும் 'ச்சச்சோ'னு பரிதாபமா உச்சுக் கொட்டினாங்களே தவிரவும், சந்தேகத்தோட ஒரு

பார்வை கூட பார்க்கல. பொம்பளை சமாசாரம். யாரும் துணிஞ்சு விசாரிக்க மாட்டாங்க. அதனால அந்தப் பிரச்னையும் இல்ல... இந்த ஐடியாவ எனக்கு சொல்லித் தந்ததே சக்குதான்!''

ரகுபதி தொண்டையை கனைத்துக் கொண்டான்.

''ஒரு மாசம் பொறுத்து மானேஜர் உன்னைக் கூப்பிட்டு 'உன் சம்சாரம் ஆபரேஷன் என்னாச்சு?'னு கேட்டா?''

''ஹோமியோபதி மருந்து சாப்பிடறா. அதனால இப்போதைக்கு ஆபரேஷன் தேவையில்லேனு சொல்லிட்டாங்க'னு சொல்வேன்...''

அன்றைக்கு வீட்டுக்குத் திரும்பிய ரகுபதி, நிம்மதியாய் சாப்பிட, உறங்க முடியாமல் ரொம்பவும்தான் தவித்துப் போனான். என்ன சாதுர்யம், என்ன நடிப்பு, என்ன அசகாய சூரத்தனம் என்கிற பொருமல்களின் இரைச்சல் அதிகமாக இருந்ததில். அன்று மட்டுமல்லாமல் அடுத்து வந்த நாட்கள்கூட நிம்மதி இல்லாமல் கழித்தான் என்பது தான் நிஜம்.

மானேஜர் முத்துசாமியும், தொழிலதிபர் நடேசனும் பாங்காங் மசாஜ், தாய்லாந்து மெழுகுப் பெண்கள் என்று நொட்டை விட்டுக்கொண்டு ஆயிரக்கணக்கில் பணத்தை செலவழித்து வெளிநாடுகளுக்குப் போய்விட்டு வந்து, எதிர்பார்த்த அளவில் அனுபவங்களும், வசதிகளும் அமையாமல் போனதால் எழுந்த ஏமாற்றத்தை அதிகம் காட்டிக் கொள்ளாமல், 'ஏதோ இருந்திச்சு!' என்று சொல்லிய நாழிகையில், வரதன் பர்மா பஜாரில் தெரிந்தவரிடம் சொல்லி ஒரு அருமையான வி ஸி ஆரை வாங்கினான்.

வெள்ளி, சனி, இரண்டு நாட்களும் மாலை நேரத்தில் வீடியோக் கடையிலிருந்து டேப்புக்களை எடுத்து வந்து டெக்கில் போட்டு தான் மட்டும் குடும்பத்தோடு கண்டு



களிக்காமல், தலைக்கு ஒரு ரூபாய் என்று வசூல் பண்ணி அந்தத் தெருவாசிகளையும் சற்றுத் தள்ளியிருந்த குடிசைவாசிகளையும் படம் பார்க்க அனுமதித்து, அந்த விதத்திலும் சம்பாதிக்க முற்பட்டான்!

## 5

அந்த சனிக்கிழமை காலை வீட்டை விட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டபோது இன்னும் சில மணி நேரத்தில் மிகப் பெரிய இழப்புக்குப் பிள்ளையார் சுழி போடப் படவிருக்கிறது என்கிற பிரக்ஞை துளியும் இல்லாததால் வழக்கம்போல ரகுபதியின் வீட்டின் முன் வரதன் வண்டியை நிறுத்தினான் ஸ்கூட்டர் ஹாரனை அட்டகாசமாய் ஒலித்து. வெளியே எட்டிப்பார்த்தவனை, ''சீக்கிரம் கிளம்புய்யா போறப்பவே விடியோ கடைல 'தளபதி' டேப்புக்கு சொல்லி வச்சிட்டுப் போகலாம். இல்லாட்டிப் போனா மதியம் ஆபீஸ்லேந்து திரும்பறப்போ கேட்டா. பாதி சமயங்கள்ல 'நல்ல படங்கள் எல்லாம் வெளியே போயிடுச்சு'னு சொல்லிடறான். இன்னிக்கு டெக்குல ரஜினி படம் போடலேன்னா கண்ணனை சமாளிக்கறது கஷ்டம். 'ஸுப்பர் ஸ்டாரோட புதுப்படத்துக்குத்தான் கூட்டிட்டுப் போகமாட்டேன்ற, வீட்டுலயாவது காட்டேன்'னு நேத்துலேந்து ஒரே நொய்...நொய்...ரஜினி படம் ரிலீஸாகி ஒரு வாரம் ஆகல, அதுக்குள்ளார போகணும்னா எப்படி! பிளாக்ல வாங்க நமக்குக் கட்டுப்படியாகாதுடா, பத்து நாள் பொறுத்துக்கனு சொன்னா போகவர அழறான்! கிளம்பிட்டியா...எந்தக் கடைலயாவது இன்னிக்கு 'தளபதி'ய புடிச்சே தீரணும்!'' என்று நீளமாகக் காரணத்தைக் கூறி வண்டியைக் கிளப்பினான்.

பாலவாக்கம் விடியோ சென்டரில் 'தளபதி' இல்லை. திருவான்மியூரில் இருந்தது.

''வேணும்னா இப்பலே எடுத்திட்டுப் போயிடுங்க... யாராச்சும் வந்து கேட்டு கடைப்பையன் கொடுத்திட்டான்னா, என்மேல வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்ல'' என்று கண்டிஷனாய் உரிமையாளர் பேச, வேறு வழியின்றி டேப்பை வாடகைக்கு எடுத்து ஸ்கூட்டர் பாக்ஸில் வைத்துப் பூட்டினான்.

''மூணு மணிக்கு எடுத்தா நாளை சாயங்காலத்துக்குள்ள இன்னிக்கு ஒரு தரம், நாளைக்காலைல ஒரு தரம்னு ரெண்டு முறை பார்க்கலாம். இப்ப அதுக்கு வழி இல்ல...நாளைக்காலைலியே திருப்பிடணும். கொஞ்சம் தாமதமா திருப்பித் தந்தாக்கூட கூசாம இன்னொரு நாள் வாடகைய வசூலிச்சிடறார்...என்ன அடாவடித் தனம் பாத்தியா...'

ரகுபதிக்கு அவன் ஏன் பொருமுகிறான் என்பது நன்றாகப் புரிந்ததால் சிரிக்கத் தோன்றியது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

ரஜினி படம், அதுவும் 'தளபதி' என்றால் தாராளமாக ரெண்டு 'ஷோ' போட்டாலும், காசு கொடுத்துப் பார்ப்பதற்கு ஆள் இருக்கிறது. குறைந்த பட்சம் ஒவ்வொரு காட்சிக்கும் இருபத்தைந்து நபர்கள் என்று வைத்துக் கொண்டாலும், சுளுவாய் ஐம்பது ரூபாய் வசூலாகும். இதில் வீட்டு மனிதர்கள் என்ற பிரிவில் பத்தையும், விடியோக் கடைக்காருக்குக் கொடுக்க வேண்டிய பத்தையும் தள்ளி விட்டாலும் நிகர லாபம் நாற்பது நிச்சயம். நாளைக்குக் காலை இரண்டாவது காட்சி போட முடியாவிட்டால் எப்படியும் பாதி வருமானம் குறையுமே...இந்தக் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டுத்தான் நண்பன் மூக்கால் அழுகிறான் என்பதை இத்தனை பழகிய பிறகும் புரிந்து கொள்ளாவிட்டால் எப்படி!



திருவான்மியூரில் தொடங்கி, கோபாலபுரம் வரைவாய் ஓயாமல் கடைக்காரரைத் திட்டிக் கொண்டு வந்த வரதன் அலுவலகத்தில் வண்டியை நிறுத்திய பிறகு இன்னொரு முறை பாக்ஸ் பூட்டி இருக்கிறதா என்று பரிசோதித்தான்.

''காணாம போயிடுச்சுன்னா இருநூறு ரூபாய் அழணும். எதுக்கு அது ஒரு தண்டம்!

அலுவலகத்துள் சென்றவர்களுக்கு ஒரு மணிவரை வாஸ்தவமாகவே செமை வேலை நெட்டியது.

ஒன்று பத்துக்கு ''போலாமாப்பா...பாதி ஆபிஸ் காலியாயிடுச்சு'' என்று இருந்த இடத்திலிருந்தே வரதன் கேட்ட பிறகு, மேஜை இழுப்பறைகளைப் பூட்டிக் கொண்டு கிளம்பினார்கள்.

''ட்ரைவ் இன்ல டிபன் சாப்டுட்டுப் போகலாமா? பசி வயித்த நிமிண்டுது!''

ரகுபதி அவசரமாய் மறுத்தான்.

''வேணாம்...நேரா வீட்டுக்குப் போயிடலாம்...இன்னிக்கு எங்க வீட்டுலதான் உனக்கு டிபன்...தங்கம் ரவா கேசரியும், வெங்காய பஜ்ஜியும் செஞ்சு வச்சிட்டு நமக்காகக் காத்திருப்பா...''

வரதன் கண்களை அகல விரித்தான்.

''கேசரியும், பஜ்ஜியுமா? என்னய்யா இன்னிக்கு விசேஷம்?''

ரகுமதி வெட்கப்பட்டான்.

' எங்களுக்கு கல்யாணம் ஆன நாள். இன்னியோட பதினைஞ்சு வருஷம் முடியுது...''

''அட்றா சக்கை! 'மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே'ய்யா...சொல்லவேயில்லியே! இப்பவும் ஒண்ணும்

தாமதமாயிடல... அடையாறு பேக்கரில் நிறுத்தி ஒரு கேக் வாங்கிட்டுப்போய், சாயங்காலம் ஜமாய்ச்சுடுவோம்! இன்னிக்கு உனக்கும், தங்கத்துக்கும் ரஜினி படம் ஃப்ரீ!''

குஷியாகப் பேசியவாறு இருவரும் லிஃப்டில் இறங்கி வாசலுக்கு வந்தார்கள். காலையில் ஸ்கூட்டர் நிறுத்தின இடத்துக்கு வந்ததும் தூக்கிவாரிப்போட ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விழித்தார்கள்.

''இங்கதானேய்யா வண்டிய நிறுத்தினேன்?''

''இங்கயேதான்...''

''காணுமேய்யா? கவனக்குறைச்சலா வேற எங்கயாவது தள்ளி நிறுத்திட்டேனா?''

''தினமும் இங்கதானே நிறுத்துவே வரதா?''

இப்படியும் அப்படியும் பார்த்தவரையில் அந்த நீல ஸ்கூட்டர் பார்வையில் விழவில்லை.

'தவறுதலா தன்னதுனு நினைச்சு உன்னுடையத யாராச்சும் ஓட்டிக்கிட்டுப் போயிட்டாங்களா வரதா?''

''சான்லே இல்லே! ஒருஸ்கூட்டர் சாவியக் கொண்டு இன்னொன்னை 'ஆன்' பண்ண முடியாது!''

''இது என்ன போதாதகாலம்! யாராச்சும் வேணும்னே வண்டிய நகத்திட்டுப் போய் பக்கத்துல ஒளிச்சு வச்சுகிட்டு விளையாட்டுக் காட்டறாங்களா? ம்? அப்படிச் செய்ய இன்னிக்கு ஏப்ரல் ஒண்ணுகூட இல்லையே?''

''அசட்டுத்தனமா யோசிக்காதய்யா...'லாக்' பண்ணியிருக்கற வண்டிய நகத்த முடியாது. அலாக்காத் தூக்கிட்டுப் போனாத்தான் உண்டு. அதுக்கும் நாலு பேர் வேணும்...அதெல்லாம் நடக்கற காரியமில்ல...''

வரதன் கேட்டருகே காம்பௌண்டு சுவரில் சாய்ந்த



வாறு பீடி பிடித்துக் கொண்டிருந்த காவல்காரன் லிங்கத்தைக் கைதட்டி அழைத்தான்.

கிட்டத்தில் வந்தவனிடம், ''என்ன லிங்கம், இங்க நிறுத்தியிருந்த என் ஸ்கூட்டரைக் காணோமே...எங்க போச்சுய்யா? என்று அதட்டினான்.

லிங்கம் முகத்தில் வியப்பு தெரிந்தது.

''அட! நீங்க இன்னமும் போகலியா சார்? நா பண்ணண்டரைக்கு சாப்பிடப் போயிட்டு இப்பத்தான் வந்தேன் வந்ததுமே பார்த்தேன், உங்க ஸ்கூட்டர் இல்ல... சரி, சீக்கிரமா புறப்பட்டுப் போயிட்டீங்கன்னு நினைச்சேன். ஆனா, நீங்க இங்க நிறுத்திட்டு,ஸ்கூட்டர் எங்கேனு என்னைக் கேக்கறீங்க! என்ன வேடிக்கை சார் இது!''

வாட்ச்மேன் விளையாட்டாகப் பேசவில்லை, நிஜமான அக்கறையுடன் வினவுவது புரிய, அது நாழிகை யாரோ ஏதோ தமாஷுக்குச் செய்கிறார்கள் என்று நினைத்திருந்த எண்ணம் மடிந்து, முதல் முறையாக வரதனின் அடிவயிற்றில் பயக் காளான்கள் முளைத்தன.

சரசரவென்று இங்கும் அங்கும் ஓடினான். எதிரில் தென்பட்டவர்களிடம் ''இங்கு நிறுத்தியிருந்த என் நீல ஸ்கூட்டரைக் காணல...புதுசு...கைனடிக் ஹோண்டா... நம்பர் டிஎஸ்ஸி ஐநூத்தி நாப்பது...யாராவது பார்த்தீங்களா?'' என்றுபடபடப்பாய் விசாரித்தான். நாயர் கடைக்குச் சென்று ''என் ஸ்கூட்டர புது ஆள் எவனாவது ஓட்டிகிட்டுப்போனதை பாத்தீங்களா?'' என்று பதறினான். தெருவின் இடப்பக்கம் இளநீர் விற்கும் பெண்மணியிடமும் அதே கேள்விகளைக் கேட்க, ''இந்த ரோடுல ஆயிரம் வண்டிங்க ஓடுது...நா இன்னாத்தக் கண்டேன்!'' என்று பதில் கூறியவள் வியாபாரத்தைத் தொடர்ந்து கவனிக்க, வண்டி திருடு போய்விட்டது உறுதியாக வரதன் அதிர்ந்தான்.

இதற்குள் அவனை ஒரு சிறு கும்பல் சூழ்ந்து கொண்டது. கொஞ்சம் தெரிந்தவர்கள், நிறைய தெரியாதவர்கள்.

''நீல ஸ்கூட்டர்— டி எஸ் வி ஐநூத்தி நாப்பதுதானே? ஆமா தினமும் இங்கதானே நிப்பாட்டுவீங்க? நா பாத்திருக்கேனே! அதையா காணும்? புதுசுசார்!''

''வரவர எங்க என்ன நடக்கும்னு எதுவும் சொல்ல முடியலங்க...பட்டப்பகல்ல, ஆபீஸுக்கு ஜனங்க போய் வந்திட்டிருக்கறப்போ, வாட்ச்மேன் குத்துக்கல்லா நிக்கறப்போ, என்ன தைரியம் இருந்தா இப்படி துணிஞ்சு திருடுவான்! நாடு ரொம்பக் கெட்டுப் போச்சு!''

''வாட்ச்மேன் இருக்கறது பெரிய பந்தோபஸ்துனு நினைக்காதீங்க...திருட்டுக்கு அவங்களே பல எடங்கள்ல உதவியா இருக்காங்க...எனக்குத் தெரிஞ்சவங்க வீட்டுல, இருவது வருஷமா வேலை பார்த்த வேலையாள், இரும்பு அலமாரிய சாவி போட்டுத் திறந்து பணத்தையும், நகையையும் திருடிட்டான்னா பாருங்க...விஸ்வாசமாவது, நேர்மையாவது...இந்தக் காலத்துல எதுக்கும் மதிப்பு இல்ல...''

''இப்படியே வேண்டாதத பேசிட்டு நிக்கறதால எதுவும் ஆகப்போறதில்ல...நடக்க வேண்டியத கவனிக்கறதுதான் புத்திசாலித்தனம். முதல்ல ராயபேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் குடுங்க...போலீஸ் உதவியில்லாம வண்டிய கண்டுபிடிக்க முடியாது. தாமதிச்சா வண்டிய அக்கு வேற, ஆணி வேறனு பிரிச்சு அடையாளமே தெரியாம ஆக்கிடுவாங்க...இல்லாட்டி நம்பர் பிளேட்டையும் நிறத்தையும் மாத்தி, பாண்டிச்சேரிக்கோ பெங்களூருக்கோ ஓட்டிட்டுப் போயி வித்துடுவாங்க... போங்க, உடனே கம்ப்ளெயிண்ட் குடுங்க...''

சக ஆபீஸர் ஒருவர் நினைப்பூட்ட, வரதன் ஆட்டோ



பிடித்து, ரகுபதியை மட்டும் அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனான்.

இன்ஸ்பெக்டரையே சந்தித்து விவரத்தைச் சொன்னான்.

''கைனடிக் ஹோண்டா...புத்தம்புதுசு சார்! வாங்கி ரெண்டு வருஷம்தான் ஆவுது...நீல நிறம் தூசி படிஞ்சாக்கூட எனக்குப் பொறுக்காது. ரெண்டு வேளையும் நானே துடைப்பேன். சீட் கவர், பாஸ்கட், விளக்கு, ம்யூஸிகல் ஹார்ன், கண்ணாடினு எக்கச்சக்கமா செலவழிச்சு எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ் போட்டிருக்கேன். எல்லாமா இருபத்திநாலாயிரத்தத் தாண்டிடிச்சு! இன்னும் ஒரு வருஷம் 'லோன்' பாக்கியிருக்கு...தயவு பண்ணி கண்டுபிடிச்சுக் கொடுத்திடுங்க சார்...நாங்கள்ளாம் மிடில் கிளாஸ் ஜனங்க...காசு அதிகமா கொடுத்து வாங்கற பெரிய பொருளைத் தொலைச்சிட்டா மறுபடியும் எங்களால வாங்க முடியாது. ஸ்கூட்டர் தொலைச்சிட்ட விஷயத்தக் கேட்டா என் சம்சாரத்துக்கு நெஞ்சு வலியே வந்திடும் சார்! நா இருக்கறது பாலவாக்கத்துல...அங்கேயிருந்து தினமும் ரெண்டு பஸ் மாறி கோபாலபுரத்துல இருக்கற ஆபீஸுக்கு வர்றது நடக்காத காரியம். எனக்கு ரத்த அழுத்த நோய் உண்டு. ஸ்கூட்டரைக் காணும்னு நினைக்கறப்பவே படபடப்பு அதிகமாகுது...உங்களைத்தான் மலை போல நம்பியிருக்கேன்...எப்படியாவது கண்டுபிடிச்சு கொடுத்திடுங்க சார்...ப்ளீஸ்...ப்ளீஸ்''

சுயபச்சாதாபத்தில் வரதனின் கண்களில் நீர் திரண்டது.

''உணர்ச்சிவசப்படாதீங்க...எப்படியும் கண்டுபிடிச்சிடலாம்...நம்பிக்கையோட இருங்க...'' என்ற இன்ஸ்பெக்டர், ''இவர் யாரு?'' என்றார் ரகுபதியை ஏறிட்டு.

''என் ஸ்னேகிதன் ரகுபதி. ஒரே ஆபீஸ்ல வேலை

பார்க்கறது மட்டுமில்ல, பாலவாக்கத்துல நா இருக்கற தெருவுலதான் இவரும் குடியிருக்கார். தினமும் ரெண்டு வேளையும் என்னோட ஸ்கூட்டர்லதான் வருவார்...''

''ம்ம்...'' இன்ஸ்பெக்டர் கண்களை இடுக்கிக் கொண்டு இருவரையும் ஆராய்ந்தார்.

ஸ்கூட்டர் நம்பர், சேஸிஸ் எண், மற்ற அங்க அடையாளங்களைக் குறித்துக் கொண்டார்.

''தினமும் வண்டிய ஒரே எடத்துலதான் நிறுத்துவீங்களா?''

''கூடுமானவரையில் ஒரே எடம்தான். எங்க ஆபீஸ் ரொம்ப பெரிசு. வேலை பார்க்கறவங்க ஸ்கூட்டரே ஐம்பதுக்கு மேல இருக்கும். அது தவிர வந்து போறவங்க வண்டிங்க...ஆனாலும், என் எடத்துல வழக்கமா யாரும் நிறுத்த மாட்டாங்க...''

''வண்டிய பூட்டினீங்களா?''

''வண்டி மட்டுமில்ல, பாக்ஸும் பூட்டியிருக்குதானு இரண்டு தரம் 'செக்' பண்ணேன்.''

அப்போதுதான் விடியோ டேப்பை பாக்ஸில் வைத்தது நினைவுக்கு வர, வரதன் கூடுதலாய் பரிதவித்தான்.

''தளபதி' கேஸட் வாங்கி பாக்ஸ்ல வச்சிருந்தேன். அதுவும் காணாமப் போயிடுச்சுன்னா கடைக்காரருக்கு நாளைக்கு இருநூறு ரூபாய் அழணும் சார்...''

இன்ஸ்பெக்டர் நமுட்டாய் புன்னகைத்தார்.

''இருபத்தையாயிரம் ரூபா பெறுமான ஸ்கூட்டரே காணாமப் போயிருக்கறப்போ இருநூறு ரூபாய்க்காக பொலம்பறீங்களே!''

''ஸ்கூட்டரை இன்ஷ்யூர் பண்ணியிருக்கேன் சார்... டேப்? காசை நா கைய விட்டு இல்ல கொடுக்கணும்!''



''உங்க ஆபீஸ் வாட்ச்மேன் எப்படி?''

''ரொம்ப வருஷமா இருக்கான் சார்...இதுவரைக்கும் அவன் மேல எந்த கம்ப்ளெயிண்டும் வந்ததில்ல...''

''கம்பெனிக்கு அவன் ஒரு வாட்ச்மேன்தானா?''

''பகல் ட்யூட்டிக்கு ரெண்டு பேர் உண்டு. ஒண்ணு வீரய்யா, இன்னொண்ணு லிங்கம். வீரய்யா இன்னிக்கு ட்யூட்டிக்கு வரலியாம். அதனால லிங்கம் சாப்பிடப் போறப்போ காவல் காக்க காம்பவுண்டுக்குள்ள யாரும் இல்ல...'என்ன லிங்கம், இப்படி பொறுப்பில்லாம போயிட்ட'னு கேட்டா. 'நானும் மனுஷன்தானே: சாப்பிட வேணாமா? ஓடிப்போயிட்டு அரை மணிக் குள்ளாரயே வந்திட்டேன்'னு சொல்றான். அந்த அரை மணிலதான் யாரோ வந்து திருட்டு சாவி போட்டு கிளப்பிட்டுப் போயிருக்கணும் ... இன்ஸ்பெக்டர், எப்படியாவது என் வண்டிய கண்டுபிடிச்சுக் கொடுத்திடுங்க சார், ப்ளீஸ்...''

''ம்ம்...லைசென்ஸ், ஆர்ஸி புக் எங்க வச்சிருக்கீங்க?''

''வீட்டுல...''

''எதுக்கும் நாளைக்கு ஒரு நடை வந்து காட்டிட்டுப் போயிடுங்க...''

வாட்ச்மேன் லிங்கம், டீக்கடைக்காரர், இன்னும் சிலரை விசாரித்துவிட்டு போலீஸ் புறப்பட்டுப் போன பிறகு, இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கும் ஸ்கூட்டர் விற்பனைக்கூடத்துக்கும் உடனடியாய் விவரத்தைத் தெரிவிப்பது அவசியம் என்று தோன்ற, ஆட்டோ பிடித்துக்கொண்டு மாம்பலத்தில் இருந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி மானேஜரின் வீட்டுக்குச் சென்றார்கள்.

ஏஜண்ட் ஹிந்திப் பிரியர் போலும்! 'பாதி சினிமாவில் என்ன தொந்தரவு' என்கிற கடுப்பில் முகம் சுணுங்க

வெளியே வந்தவரிடம், ''ஸாரி சார், வீட்டுக்கு வந்து தொந்தரவு செய்றத்துக்கு மன்னிக்கணும், உங்க ஆபீஸுக்கும் போன் பண்ணேன், வாட்ச்மேன்தான் இருந்தார். 'சனி, ஞாயிறு லீவு, அவசரம்னா மானேஜரை அவர் வீட்டுல போய் பாருங்க'னு சொல்லி அட்ரஸ் தந்தார். ரொம்ப அர்ஜன்ட் மேட்டர். இல்லாட்டி வந்திருக்க மாட்டேன்' என்று பீடிகை போட்டுவிட்டு நடந்ததை வரதன் சொன்னான்.

இப்போது. ஏஜண்டின் முகத்தில் சுணுக்கம் மறைந்து கவலை பரவியது.

''போலீஸ் கம்ப்ளெய்ண்ட் குடுத்திட்டீங்களா?!'

''ஆச்சு. அவங்க எங்க ஆபீஸுக்கு வந்து விசாரணை முடிச்சப்புறம் நேரா இங்கதான் வரோம்''

ஏஜண்ட் யோசனை மாறாமல் பேசினார்.

''ஆல்ரைட்—இன்னி தேதி போட்டு விவரமா ஒரு லெட்டர் எழுதி திங்கக்கிழமை ஆபீஸுக்கு கொண்டு வாங்க...போலீஸ் என்ன சொல்றாங்கன்னு பார்த்திட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனா ஒண்ணு எங்க கம்பெனி இன்ஸ்பெக்டர் ஸ்கூட்டருக்கு தற்சமய மதிப்பு என்னனு சொல்றாரோ அதை மட்டும்தான் கொடுக்க முடியும். உங்க ஸ்கூட்டருக்கு நீங்க போட்டிருந்த எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ் அலங்காரங்களுக்கு இன்ஷூரன்ஸ ஈடு கொடுக்க இடம் இல்ல. அந்த விதி உங்களுக்குத் தெரியும்னு நினைக்கறேன். சரி, போயிட்டு வாங்க... ...பெஸ்ட் ஆஃப் லக். ஸ்கூட்டர் திரும்பக் கிடைச்சிடுச்சின்னா உங்களுக்கும் கஷ்டம் இல்ல, எங்களுக்கும் நஷ்டம் வராது''

ஏஜன்ட் வீட்டிலிருந்து நேராக அடையாறிலிருந்த ஸ்கூட்டர் விற்பனை கடைக்குச் சென்றார்கள்.



கொஞ்சம் காத்திருந்துவிட்டு மானேஜரை சந்தித்தார்கள்.

சேதியை அறிந்து கொண்ட மானேஜர் புருவங்கள் சுருங்க சில நொடிகளுக்கு அமர்ந்திருந்துவிட்டுப் பேசினார்.

''ரெண்டு வருஷம் ஒழுங்கா 'இன்ஸ்டால்மெண்ட்' கட்டிட்டீங்க... இன்னும் ஒரு வருஷம் பாக்கி நிக்குது... ஸ்கூட்டர் கிடைச்சிட்டா பிரச்னை இல்ல. இல்லாட்டி, என்ன செய்யறதுனு இன்ஷூரன்ஸ் கம்பெனியோட ஒண்ணா உக்காந்து யோசிக்கணும். போலீஸ்கிட்ட கொடுத்த எஃப்ஐஆரோட நகல் ஒண்ணை வச்சி திங்கக்கிழமை எங்களுக்கு ஒரு கடிதாசு போடுங்க...அதான் முறை... அப்புறம் நாலு நாள் வெயிட் பண்ணி போலீஸ் என்ன செய்யறாங்கனு பார்த்திட்டு மேற்கொண்டு நாம செய்ய வேண்டியதக் குறிச்சு சிந்திக்கலாம்...''

கடைய விட்டு வெளியே வந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. இன்னொரு ஆட்டோ பிடித்து பாலவாக்கத்துக்குப் பயணித்த நிமிஷங்களில் வரதன் வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டே வந்தான்.

''திருஷ்டிதான்ய்யா...நானும் என் குடும்பமும் நல்லா இருக்கோம்னு எல்லாருக்கும் பொறாமை...'கல்லடிபட்டாலும் கண்ணடி படக்கூடாது தம்பி'னு எங்கம்மா சொல்லுவாங்க...அதுக்கு அர்த்தம் எனக்கு இப்பத்தான் புரியுது. நா ஸ்கூட்டரும், சொந்த வீடுமா வாழறதுல அவனவனுக்கு ஆத்தாமை. வயத்துல பல் இருக்கற ஜன்மங்க... இவனுங்க எல்லாம் நாசமாத்தான் போவாங்க... என் வயிறெரிஞ்சு சொல்றேன், ஒருத்தன்கூட நல்லா இருக்க மாட்டான்...ஒண்ணா ரெண்டா, இருபத்து நாலாயிரம்... ஐயோ...ஐயோ...''

ரகுபதி அல்லப்போது மனசைத் தளர விடாத

வரதா...ஸ்கூட்டர் கண்டிப்பா கிடைச்சிடும்...நம்ம போலீஸ் திறமையானவங்க...கண்டு பிடிச்சிடுவாங்க... தைரியமா இரு என்று சொல்லி நண்பனை சமாதானப்படுத்துவதைத் தவிர வேறு எதுவும் பேசாமல் வந்தான்.

அடையாறு பேக்கரியை ஆட்டோ தாண்டியபோது மதியம் வரதன் 'கேக்' வாங்கிட்டுப்போய் ஜமாய்ச்சிடுவோம், என்று சொன்னதும், வீட்டில் ரவா கேசரி பஜ்ஜியுடன் மனைவி காத்திருப்பாள் என்பதும் ஞாபகத்துக்கு வந்தன. உடனே தலையை உலுக்கி, அந்த நினைப்பை விரட்டினான். ஆயிரக் கணக்கு மதிப்புள்ள பொருளை பறிகொடுத்துவிட்டு மனசு உடைந்த நிலையில் வரதன் இருக்கும் போது கேக் பற்றி நினைப்பதுகூட பாவம். தாடி பற்றி எரியும் போது பீடிக்கு நெருப்பு கேட்டவன் மாதிரி நடந்து கொள்ளக்கூடாது என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

பாலவாக்கத்தை அடைந்த பிறகு, வரதனைத் தனியே விடுவது கூடாது என்கிற எண்ணத்துடன் முதலில் தான் இறங்கிக் கொள்ளாமல் 'நேரா கடைசி வீட்டுக்குப் போங்க' என்று டிரைவரிடம் சொன்னான்.

''நேரமாகிவிட்டாலும் அப்பா எப்படியும் தளபதி டேப்போடு வந்து விடுவார்' என்று கண்ணன் நம்பிக்கை கொடுத்திருந்ததில், வரதன் வீட்டில் தெருவாசிகளும் குடிசைவாசிகளுமாய் ஏழெட்டுப் பேர்கள் கொண்ட கும்பல் காத்திருந்தது

ஸ்கூட்டரில் வராமல், கலைந்து, உடைந்து போய் ஆட்டோவில் வந்து வரதன் இறங்கியதுமே 'ஏதோ பெரிசாய் தவறு நடந்திருக்கிறது' என்பதை எல்லோராலுமே புரிந்து கொள்ள முடிந்தது.

அடுத்த சில நிமிஷங்களில் சாவு விழுந்த வீடு மாதிரி அந்த இடம் அல்லோலகல்லோலப்பட்டுப் போயிற்று. சகுந்தலா வாய்விட்டு அழ, அவளுக்கு சிலர் ஆறுதல் கூற, 
வாண்டுகள் தம்தம் வீட்டுக்கு ஓடி விவரத்தைக் கூறியதில், அந்தந்த வீட்டுப் பெரியவர்கள் போட்டது போட்டபடி வந்து வரதனிடமும் சகுந்தலாவிடமும் பக்கம் பக்கமாக துக்கம் விசாரித்தனர்.

நடந்ததைத் திருப்பித் திருப்பி விவரித்ததில் ரகுபதிக்கு தொண்டை கட்டிக் கொண்டது. 'தைரியமா இரு வரதா, ஸ்கூட்டர் கிடைச்சிடும்னு உள்மனசுல தோணுது' என்ற வார்த்தைகளைக் கடைசியாய் ஒரு தரம் கூறிவிட்டு அவனும் தங்கமும் வீட்டுக்கு வரும்போது டெலிவிஷனில் ஆங்கில செய்திகள் தொடங்கி இருந்தன.

ஆறிப்போன கேசரியையும், பஜ்ஜியையும் தட்டில் வைத்து தங்கம் நீட்டியதும், நண்பனை விட்டுவிட்டு தான் மட்டும் சாப்பிடுகிறோமே என்கிற உறுத்தலோடு ரகுபதி டிபனை சாப்பிட்டான்.

மனசு பொறுக்காமல் காலையில் 'டேப்' எடுத்ததிலிருந்து ஸ்கூட்டரை விற்ற கடைக்குப் போனது வரை ஆதியோடந்தமாய் மனைவியிடம் மறுபடியும் ஒருமுறை சொல்ல, 'பாவங்க...ரொம்பப் பாவங்க...யாரா இருந்தா என்னா? இருபத்திநாலாயிரம்ன்றது எவ்வளவு பெரிய தொகை!' என்று நடுநடுவில் தன் பங்குக்குத் தங்கமும் வருத்தம் தெரிவித்தாள்.

இனிமேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்றான பிறகு, பதினோரு மணி அளவில் தங்கத்தோடு, படுக்கப் போகையில் கூட, தைரியத்துக்காக 'ஸ்கூட்டர் கிடைச்சிடும், கவலைப்படாதே, என்று சொன்ன வார்த்தை மறுநாள் விடிகாலையிலேயே பலிக்கப் போகிறது என்று ரகுபதி எதிர்பார்க்கவே இல்லை!

## 6

யாரோ முதுகைத் தட்டி எழுப்பினாற்போல் விழிப்பு கண்டுவிட்டது. மசமசத்த கண்களை இரண்டு தரம் சிமிட்டியதும, சுற்றிலும் காணப்பட்ட கருமை இன்னும் விடியவில்லை என்பதை உணர்த்தியது.

எழுந்து ஓசைப்படாமல் பானையிலிருந்து ஒரு டம்ளர் நீர் எடுத்துக் குடித்துவிட்டு மீண்டும் வந்து படுத்தபோது சற்று முன் கண்ட கனவின் நினைப்பு மனசுள் சுகமாய் பரவியது.

வரதனும் அவனும் நாயர் கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழியாகச் சென்ற ஒரு குண்டுப் பெண்மணி திடுமென ''ஐயோ, என் நெக்லெஸ்-பாவி அறுத்துகிட்டு ஓடறான்'' என்று வீறிட்டுக் கத்த, எல்லாரும் செயலிழந்து வேடிக்கை பார்த்த நிமிஷத்தில் திருடன் வெகு சாமர்த்தியமாய் ஓரத்தில் நிறுத்தியிருந்த ஆட்டோவில் ஏறிக்கொண்டு தப்பிக்கிறான். ''யாராவது அவனைப் பிடியுங்களேன், என் நெக்லஸ் போச்சே... இங்க வீரமுள்ள ஆம்பிளை யாருமே இல்லையா!'' என்று பெண்மணி அலறுவது வீரத்தை உசுப்பிவிட வரதன் அவசரமாய் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து, ரகுபதி பின் சீட்டில் உட்கார்ந்ததும் ஆட்டோவைப் பின்தொடருகிறான். ஆட்டோ நேர் ரோட்டில் காற்றாய் பறக்க, ''வரதா இந்த ரோட்டுல இப்ப வரப்போற திருப்பத்தை விட்டா ரொம்ப தூரத்துக்கு வேற திருப்பம் கிடையாது. ஆட்டோ திரும்பல... நேராப் போறன். நாம இப்ப லெஃப்ட்டுல ஒடிச்சு குறுக்கு வழியாப் போனா, அடுத்த சந்தை அவன் எட்டறத்துக்குள்ளார அங்க போயிடலாம். திரும்பு...'' என்று இவன் சொன்னதை ஏற்று வரதன் வண்டியைத் திருப்பி சந்து பொந்தில் கனவேகமாய்



ஓட்டி, அடுத்த திருப்பத்தில் திருடர்களை மடக்கி விடுகிறார்கள். ஆட்டோ டிரைவரை இவனும், திருடனை வரதனும் உதைத்து கைகளைப் பின்னால் கட்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துவர. ''அட, இவனுகளா! ரொம்ப நாளா தேடப்பட்டு வந்து கேடிங்களாச்சே! இவனுங்களப் பிடிச்சுக் கொடுத்ததுக்காக உங்களுக்கு சன்மானம் கிடைக்கும் சார், பாராட்டுக்கள்!'' என்று சொல்லி இன்ஸ்பெக்டர் பாராட்டுகிறார். தொப்பையும் தொந்தியுமாக ஒரு நபர் ஓடிவந்து ''என் மனைவியோட வைர நெக்லஸ் மீட்டுத் தந்ததுக்கு ரொம்ப நன்றி. அத அவங்க கழுத்துல எங்க பாட்டி போட்ட. நாளா தொட்டதெல்லாம் தொலங்குது! அதனாலதான் கழுத்த விட்டுக் கழட்டாம போட்டிட்டிருக்கா... அந்த நெக்லஸ் போயிருந்தா எங்க அதிர்ஷ்டமும் போயிருக்கும். நா நடத்தற பல தொழிற்சாலைங்கள் ஸ்கூட்டர் உற்பத்தி பண்றதும் ஒண்ணு...என் நன்றியத் தெரிவிக்கற விதமா உங்களுக்கு ஒரு புது ஸ்கூட்டர் அன்பளிப்பா தரேன்... மறுக்காம ஏத்துக்கங்க...'' என்று சொல்லி புது ஸ்கூட்டரைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். வரதனுக்கு வாயெல்லாம் பல். இவனிடம் வந்து ''நீ குறுக்கு வழியச் சொல்லி இருக்காட்டி நாம அந்தத் திருடங்களப் பிடிச்சிருக்க முடியாது. இந்த வெற்றில உனக்கும் சம பங்கு உண்டு, எனக்குப் புதுசு கிடைச்சிருக்கறதால என் பழைய ஸ்கூட்டர நீ எடுத்துக்க...'' என்று சம்பிரமாய் பேசி சாவியை இவனிடம் தருகிறான். அருகில் நிற்கும் ஸ்கூட்டரை வாஞ்சையோடு இவன் தடவிக் கொடுக்கிறான். கைனடிக் ஹோண்டா. நீல நிறம். நம்பர் டிஸ்ஸி ஐநூத்தி நாப்பது. ''தங்கம், இனி இது நம்மளுது. பஸ்ஸுல இடிபட்டுகிட்டு நீ மருந்தீஸ்வரர் கோவிலுக்குப் போக வேணாம்...எங்க போகணும் சொல்லு. ராணியாட்டம் பின்ஸீட்டுல உன்னை உக்கார வச்சுகிட்டு நா கூட்டிட்டுப் போறேன்.'' மகிழ்ச்சி அதிகமாகி

ஸ்கூட்டரை அணைக்கக் குனியும் போதும், ஹாண்டில் பார் நெற்றியில் இடிக்க...

அப்போது தான் விழிப்பு கண்டு விட்டது.

எத்தனை விஸ்தாரமான, ஆனால், குழந்தைத்தன மான கனவு என்று நினைக்கையில் ரகுபதிக்கு வாய்விட்டு சிரிக்கத் தோன்றியது.

கனவுகள் என்பவை ஆழமனசின் வெளிப்பாடுகள் என்று எப்போதோ படித்திருந்தது ஞாபகத்துக்கு வர, ஆழமனசில் அப்படியென்ன புதைந்து கிடக்கின்றன. இப்படி கனவாக வெளிப்பட என்று சிந்தித்தான்.

தனக்கென்று சொந்தமாய் ஒரு ஸ்கூட்டர் இருந் தால் நன்றாக இருக்கும் என்று எண்ணியது உண்மை தான்- அப்புறம்? வில்லனைத் துரத்தும் அந்த சினிமாத் தனமான வீரதீர சூரத்தனத்திற்குக் காரணம்புரியவில்லை கொஞ்சம் நேரம் புரண்டு புரண்டு படுத்து யோசனை பண்ணிக் கொண்டிருந்துவிட்டு, கடைசியில் எதுவுமே காரணமில்லை' எதிர்பார்க்காமல் வரதனின் ஸ்கூட்டர் திருடு போனது குறித்தான வேதனை அதிர்ச்சியுடன் உறங்கப் போனதில் இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லா மல் ஒரு கனவு வந்தது என்று தன்னைத் தானே சமா தானம் செய்து கொண்டபின் மறுபடி உறங்க முற் பட்டான்.

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தவனை மாமா... மாமா... என்று வரதனின் மகன் கண்ணன் அழைக்கிற மாதிரி தோன்ற 'சரி, மறுபடியும் கனவு காண்கிறோம் போலிருக் கிறது' என்று நினைத்துக் கொண்டு கண்களை திறக்காம லேயேபடுத்திருந்தான். ஆனால் தொலைவில் ஒலித்த குரல் அருகாமைக்கு வந்ததோடு தோளில் கைவைத்து 'மாமா'



என்று உலுக்க கண்விழித்தவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

இல்லை கனவு இல்லை. உண்மையாகவே கண்ணன் தான்.

''என்னடா, இந்த ராத்திரி நேரத்துல? என்ன விஷயம்?''

''ராத்திரியா? விடியப்போகுது மாமா......மணி அஞ்சரை!''

ஜன்னல் வழியாக அறைக்குள் பரவிய சாம்பல் நிற வெளிச்சம் அவன் சொல்வது சரிதான் என்றது.

''மாமா, ஸ்கூட்டர் கிடைச்சிடுச்சு!''

''என்னது!'' கண்களில் ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச உறக்கமும் விடைபெற ரகுபதி பரபரத் தான்.

''நிஜமாத்தான் மாமா. காலைல வேலைக்கு வர்ற ஆயா. அம்மாகிட்ட 'கொஞ்சம் ஐயாவ எழுப்பி ஸ்கூட்டரை நகர்த்தி வைக்கச் சொல்லுங்க, வாசல் தெளிச்சு கோலம் போட எடஞ்சலா நட்ட நடுப்புல நிக்குது'னு சொன்னதும், அம்மா 'என்ன உளர்றே ஸ்கூட்டராவது நட்ட நடு வாசல்ல நிக்கறதாவது!'னு அதட்டிகிட்டே வாசலுக்கு வந்தா... நம்ம வண்டியே தான் மொட்டுபோல நிக்குதாம். சந்தோஷம் தாங்காம ''இங்க வந்து பாருங்க, அதிசயத்த'னு கத்திகிட்டே அப்பாவ அம்மா எழுப்ப, அவரு என்னை எழுப்ப, பத்து நிமிஷமா வீட்டுல ஒரே கலாட்டாதான்! 'போய் ரகுபதியக் கூட்டிக்கிட்டு வா'னு அப்பா சொன்னார். ஓடி வந்தேன். வரீங்களா மாமா?''

''போய்கிட்டே இரு. பின்னாலயே வரேன்'' என்று சொல்லி அவனை அனுப்பின ரகுபதி அவசரமாய் பல்

தேய்த்து சட்டையை மாட்டிக்கொண்டு போய் வந்து காபி குடிக்கறேன்' என்று தங்கத்திடம் சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாய் வரதனின் வீட்டை நோக்கிப் போனான்.

வாசலில் நீல நிற அள்ளிப்பூபோல பளபளவென்று நின்றுகொண்டிருந்த ஸ்கூட்டரைப் பார்த்ததும் மனசுக்கு அம்மாடி என்றிருந்தது. வரதனும் மற்றவர்களும் வாச வராந்தாவிலேயே நின்றிருந்தனர்:

''என்ன வரதா, பொழுது நல்லா விடிஞ்சிருக்குபோல இருக்கு...ரொம்ப சந்தோஷம். அது சரி, வண்டிய எப்படி கண்டுபிடிச்சே, போலீஸ் கொணாந்து விட்டுட்டுப் போனாங்களா, இல்ல நீ போய் எடுத்திட்டு வந்தியா? தனியாவாப் போனே? ஒரு குரல் கொடுததிருந்தா நானும் வந்திருப்பேனே...''

கேள்வி மேல் கேள்விகளாய் அடுக்கிய ரகுபதியை நீட்டித் தடுத்தான் வரதன்.

''இருய்யா...வெவரம் புரியாம மேலமேல கேட்டு கிட்டே போவாத... வண்டிய போலீஸ் கொண்டு வந்து தரல... நானும் போய் எடுத்துகிட்டு வரல...''

''அப்புறம் எப்படி திரும்ப உன் வீட்டு வாசல்ல நிக்கிது? வெளையாடாத வரதா - ஸ்கூட்டர் என்ன இறக்கைக் கட்டிகிட்டு தானா பறந்தா வந்திருக்கும்!''

கிட்டத்தட்ட அந்த மாதிரிதான் ஏதோ நடந் திருக்கு...நேத்துக் காலைல வேலைக்கு வந்து போயிட்ட ஆயாவுக்கு வண்டி திருடுபோன விஷயம் தெரியாது. அது காலைல சகுந்தலாகிட்ட அதை நவுத்தச்சொன்னதும் 'கிழம் கண்ணு தெரியாம எதையோ உளறுது'ன்ற எரிச்சலோட வாசல்ல எட்டிப் பார்த்த சக்கு, மெய் யாலுமே ஸ்கூட்டர் நிக்கறதப் பார்த்திட்டு அலறி அடிச்சு



கிட்டு என்னை வந்து எழுப்பினா... ஓடி வந்து பாத்தா, தூக்கிவாரிப் போடுதுய்யா! என் வண்டியேதான்! எடுத் திட்டுப் போனது யாரு. திரும்பக் கொண்டு வந்து விட்டது யாரு - எந்த விவரமும் சாமி சத்தியமா எனக்குத் தெரியாது! இது என்ன 'ஜீ பூம்பா' வேலைனு மலைப்பா இருக்கு! உனக்கு எதுனாச்சும் தெரியுமான்னு கேக்கறதுக்காகத்தான் மொதல்ல உன்னக் கூட்டிட்டு வர கண்ணனை அனுப்பினேன்''

ரகுபதி அரண்டான்.

''ஐயய்யோ...எனக்கொண்ணும் தெரியாது வரதா... ராத்திரி மனக்கஷ்டத்தோடு வீட்டுக்குப்போய்படுத்தவன், இப்ப கண்ணன் கூப்பிட்டுத்தான் முழுச்சுகிட்டேன்'' யார் வராங்க. யார் போறாங்கனு எனக்கு எதுவும் தெரி யாது!''

வரதன் வாசப்படிக்கட்டில் உட்கார்ந்து கொண் டான். தூணில் சாய்ந்து நின்றிருந்த சகுந்தலா தன் சந்தேகத்தை வெளியிட்டாள்.

போலீஸே வண்டிய கண்டுபிடிச்சு, ராவோட ராவா கொண்டு விட்டிருப்பாங்களா? நடு ராத்திரில எழுப்பி தொந்தரவு செய்ய வேணாம். காலைல வந்து வெவரமா பேசிக்கலாம்னு போயிருப்பாங்களோ?''

வரதன் தலையசைத்து மறுத்தான்.

''போடி பைத்தியம்...திருட்டுப்போன பொருளை அத்தனை சுலபமா திருப்பித் தர மாட்டாங்க. ஆர்சி புக், லைசன்ஸ் பார்த்து, இது என்னுதுதானுன்னு உறுதிப் படுத்திட்டு, பொருளைத் திருப்பி வாங்கிகிட்டே'னு என் ணண்டை கையெழுத்து வாங்காம இப்படி ராத்திரில திருடன் மாதிரி வந்து விட்டுட்டுப் போக மாட்டாங்க...''

''திருடனைப் பிடிச்சிருந்தா, கோர்ட், கேஸ்னு அலைஞ்சப்புறம்தான் பொருள் கைக்கு வரும்...போலீஸ்

இப்படி அனாமதேயமா காரியத்தச் செய்யாது'' என்று ரகுபதி தனக்குத் தெரிந்த விவரத்தை பகிர்ந்து கொண்டான்.

''ஆபீஸ் நண்பங்க யாராவது இப்படி செய்வாங்கனு நினைக்கறீங்களா?''

''சும்மா விளையாட்டுக்கு வண்டிய எடுத்திட்டுப் போய் மறுபடி கொணாந்து விட்டிருப்பாங்கனு சொல்றியா?''

''அப்படி இல்ல...நா ஆபீஸ்ல பிரபலமா இருக்கறது பிடிக்காம, பொறாமை பிடிச்சவங்க யாராவது என்னை வேதனைப்பட வைக்கணும்னு இப்படி செஞ்சிருக்கலாம் இல்லியா?''

ரகுபதி ஓரடி வைத்து வரதனின் அருகில் படிக்கட்டில் தானும் அமர்ந்தான்.

''எனக்கென்னமோ அத்தனை தைரியம் யாருக்கும் இருந்திருக்கும்னு தோணல... அதுவும் வண்டியக் காணும்னு தெரிஞ்சப்புறம் நாம போலீஸ் ஸ்டேஷன், இன்ஷுரன்ஸ் கம்பெனினு ஏஜண்ட் வீடுனு அலைஞ்சது, எடுத்திட்டுப் போனவனுக்குத் தெரியாம இருந்திருக்குமா? என்னதான் உன்னை அழ வைக்க நினைச்சாலும். இந்த அளவுக்கு யாரும் போகமாட்டாங்கன்னுதான் நா நினைக்கறேன்.''

வரதன் முன்னால் சாய்ந்து விரலை சொடுக்கினான்

''கரெக்ட்... இப்படித்தான் நடந்திருக்கணும். எவனோ ஆத்தாமை பிடிச்சவன் என்னைக் காயப்படுத்த நினைச்சு வண்டிய கிளப்பிக்கிட்டுப் போயிருக்கணும். விஷயம் போலீஸ் வரை போனதும் மிரண்டு போய், ராவோட ராவா, ரெண்டாம் பேருக்குத் தெரியாம என் வீட்டுக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கணும்!''



வரதன் பேசியதை அவன் மனைவியும் பிள்ளைகளும் ஆமோதிக்க, ரகுபதி சில நொடிகளுக்கு மௌனமாயிருந்தான். பிறகு நீளமாய் பெருமூச்சை வெளியிட்டு, ''நம்ம ஆபீஸ்க்காரங்க இத்தனை கீழ்த்தரமா நடந்துப்பாங்கனு தோணலை...எது எப்படியோ, பொருள் நமக்குத் திரும்ப கிடைச்சிடுச்சு! முதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் கொடுத்த கம்ப்ளெயிண்டைத் திரும்ப வாங்கணும், இன்ஷுரன்ஸ் கம்பனி, அடையாறு ஸ்கூட்டர் கம்பெனிக்கும் விவரத்தத் தெரியப்படுத்தணும்'' என்றான்.

வரதன் அலுப்போடு இரண்டு கைகளையும் உயர்த்தி தலைக்கு மேல் சோம்பல் முறித்தான்.

''இன்னிக்கே போய் சொல்லணுமா? ஞாயித்துக் கிழமை யார் இருப்பாங்க? நாளைக்கு மொத காரியமா மூணு எடத்துலேயும் சொல்லி, செய்ய வேண்டியத செஞ்சிடுவோம் ..என்னய்யா?''

சம்மதிக்கும் விதமாய் ரகுபதி எழுந்து நின்றான்.

''அப்ப, நா வரேன்...பொருள் கிடைச்சிட்ட நிம்மதியோட இரு''

திரும்பி நடந்தவன் ஏதோ நினைப்புக்கு வந்த மாதிரி, ''வண்டிய ஓட்டிப் பாத்தியா வரதா? ஒழுங்கா ஓடுதா? 'பாடி'ல அடி கிடி, சிராய்ப்பு எதுவும் இல்லியே?'' என்று வினவ, வரதன் எழுந்து வண்டியிடம் சென்றான் இரண்டு தரம் சுற்றி வந்து மேலும் கீழும் உட்கார்ந்து கண்காணித்தான்.

''எந்த சேதமும் இருக்கறதா தெரியல. குளிச்சிட்டு ஓட்டிப் பாக்கறேன்...''

விடை பெற்றுக் கொண்டு நடந்த ரகுபதி மறுபடி நின்றான்.

''தளபதி டேப் இருக்கா பாத்தியா வரதா?''

வரதன் கையை உதறினான்.

''அடேடே...நம்ம அமர்க்களத்துல அதை மறந்திட்டேனே! முதல்ல அதப் பாக்கணும்பா...ஒம்பது மணிக்குப் திருப்பணும், இல்லாட்டி இன்னொரு நாள் வாடகைய வசூலிச்சுடுவான்...டே கண்ணா, டேப்பை எடுத்துத் தரேன், உடனடியா ஒரு தரம் பார்த்திடு...''

பேசிக்கொண்டே ஸ்கூட்டரின் வாயிலேயே தொங்கிக் கொண்டிருந்த சாவிக் கொத்தை வெளியே எடுத்து பாக்ஸைத் திறந்தவன், ''அப்பாடா, இருக்குடா!'' என்று நிம்மதியுடன் அதை வெளியில் எடுத்தபோது, கூடவே தடிமனாய் நீண்ட ஒரு கடிதமும் அதனோடு ரப்பர் பேண்டால் இணைக்கப்பட்டு வர, ''என்னய்யா இது?'' என்றவாறு பிரித்தான்.

''மரியாதைக்கும் அன்பிற்கும் உரிய திரு. வரதன் அவர்களுக்கு'' என்று மிகுந்த மரியாதையுடன் துவங்கியிருந்தது அந்த நீண்ட கடிதம்.

வரதன் கடிதத்தை உரக்கப் படித்தான்.

'நேற்று உங்கள் ஸ்கூட்டரை எடுத்துச் சென்றவன் நான்தான். அதன் பொருட்டு நேற்று உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் உண்டான மனவேதனை, அலைச்சலுக்காக முதலில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் நேற்று ஒரு நெருக்கடியான நிலையில் நான் இருந்தபோது, செங்கல்பட்டு வரை செல்ல வேண்டிய ஒரு அவசர தேவைக்காக உங்கள் வண்டியை கேட்காமலேயே எடுத்துக் கொண்டு செல்லும் நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டேன். இரவு பதினொரு மணிக்கு என் வேலை முடிந்து விட்டது. அதன் பிறகு உங்கள் வீட்டில் வண்டியைக் கொண்டு வந்து விட்டுச் சென்றதும் நான்தான். எதுவானாலும் அனுமதி வாங்கிக் கொண்டு சென்றிருக்கலாமே என்று கேட்பீர்கள். நியாயமான



கேள்வி. ஆனாலும் நான் இருந்த அவசரத்தில் அது சாத்தியம் இல்லாமல் போய்விட்டது. இந்தத் தவறுக்காகவும் என்னை மன்னிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களை, உங்கள் வீட்டை, குடும்பத்தை எனக்குத் தெரியும் என்பது போல என்னையும் உங்களுக்குத் தெரியும். திங்கள் கிழமை உங்களை சந்தித்தால் நான் யார் என்று தெரிந்து கொள்வீர்கள். நேரில் பார்க்கும்போது ஏன், எதற்கு, எங்கு சென்றேன்—ஆகிய விவரங்களை விளக்குகிறேன். கேட்டபிறகு என்பால் தோன்றியுள்ள தங்கள் கோபம் மறையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

'வண்டியை ஏதேனும் தவறான காரியத்துக்கு பயன்படுத்தியிருப்பேனோ என்கிற ஐயம் உங்களுக்குத் தோன்றலாம். நான் வணங்கும் என் தாய் சாட்சியாக அப்படி எதுவும் நடக்கவில்லை இதை நீங்கள் நம்ப வேண்டும். 'நீ செய்த தவறுக்கு சில காரியங்கள் மூலம் பிராயச்சித்தம் செய்வதுதான் முறை' என்று என் தாயார் சொல்கிறார். அதன்படி, வண்டியின் பெட்ரோல், எண்ணை டாங்குகளை நிறைத்து விட்டேன். அதோடு, ஸூப்பர் ஸ்டார் ரஜினியின் புதுப்படத்திற்கு உதயம் தியேட்டருக்கு நாலு டிக்கெட் நாளை மாலைக் காட்சிக்கு எடுத்து தனி உறையிலிட்டு இத்துடன் வைத்திருக்கிறேன். புதுப்படத்துக்கு இவனுக்கு எப்படி டிக்கெட் கிடைத்தது, பிளாக்கில் வாங்கியிருப்பானோ என்று பயப்பட வேண்டாம். என் குடும்பத்துக்கு திரைப்படத் தொழிலோடு சம்பந்தம் உண்டு. அதனால் எந்த கொட்டகையிலும் டிக்கெட் எடுப்பது எளிது. கடைசியாக, டிக்கெட்டோடு இருநூறு ரூபாய் பணம் வைத்திருப்பது நீங்தள் குடும்பமாய் ஆட்டோவில் சென்று வர... 'இவன் யார் இப்படியெல்லாம் நமக்குத் கொடுக்க' என்று கோபப்படாமல், தயவு செய்து என்னை உங்கள் சகோதரனாக நினைத்து, நான் செய்த தவறுக்குப் பரிகாரமாய் இவற்றை ஏற்றுக்

கொள்ளுங்கள். நீங்கள் படத்திற்குச் சென்று வந்தால், என்னை மன்னித்து விட்டீர்கள் என்று கருதி நாளைக் காலை எட்டு மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருகிறேன். போகவில்லை என்றால், எனக்கு மன்னிப்பு இல்லை என்று எடுத்துக் கொண்டு ஆயுசுக்கும் உங்களை சந்திக்காமல் விலகி ஓடி விடுவேன், இது சத்தியம். இப்படிக்கு - சூழ்நிலை காரணமாக தவறு செய்துவிட்டு உங்கள் மன்னிப்புக்காகக் காத்திருக்கும் ஒரு எளியவ் '

வரதன் படித்து முடித்து முழுசாய் ஒரு நிமிஷம் ஆகியும் யாரும் எதுவும் பேசவில்லை. கேட்டதை நம்ப மாட்டாமல் ஸ்தம்பித்திருக்க, வரதன் முதலில் அமைதியைக் கலைத்தான்.

''என்ன சக்கு இது! என்னய்யா இது!'' மனைவியையும் நண்பனையும் மாறி மாறி மாறி ஏறிட்டுக் கேட்டு விட்டு, இன்னொரு தரம் மனசுக்குள் வேகமாய் கடிதத்தைப் படித்தான்.

இரண்டாவது முறை படித்தும், படித்தது விளங்காத ரீதியில் ரகுபதியை பார்த்து ''என்னய்யா இது—யாராவது வெளையாடறாங்களா?'' என்று கேட்டான்.

ரகுபதி எட்டி அவன் கையிலிருந்த கடிதத்தையும், காகித உறையையும் வாங்கினான். உறைக்குள் இருந்த சின்னக்கவரை எடுத்துப் பிரித்தான். நூறு ரூபாய் நோட்டு இரண்டும், உதயம் தியேட்டரில் அன்றைய மாலைப்படக் காட்சிக்கான டிக்கெட்டும் இருக்க, ''இல்ல வரதா... இதை எழுதியனுப்பினவங்க நிச்சயம் விளையாடலை...இங்க பாரு, பணம், சாயங்கால ஆட்டத்துக்கு டிக்கெட்...'' என்றான்.

அவன் பேசி முடிப்பதற்குள் கண்ணன் சரசரவென்று முன்னால் பாய்ந்து ரகுபதி கையில் பிடித்திருந்த டிக்கெட்டைப் பறித்து, அதில் உள்ள விவரங்களைப்



படித்தான். ''உதயம் தியேட்டர், மாலைக்காட்சி பால்கனி, இன்னிய தேதி... ஐயோ அப்பா. ஸூப்பர் ஸ்டாரோட படத்துக்கு டிக்கெட்ப்பா... தலைகீழா நின்னாலும் ஒரு மாசத்துக்குக் கிடைக்காது. நமக்கு இன்னிக்கு ரொம்ப லக்கி நாளுப்பா...நாளக்கி ஸ்கூலுக்குப் போய் 'ஸூப்பர் ஸ்டார் படத்தைப் பார்த்திட்டேன் னு சொன்னா யாரும் நம்பக்கூட மாட்டாங்க! அப்புறம் எரிச்சல்ல செத்துடுவாங்க...நா இப்பவே போயி மூணாம் நம்பர் வீட்டு ரமேஷ்கிட்ட விஷயத்தைச் சொல்லிட்டு வரேன். 'உனக்கு முன்னாடி நா பாத்திடறேன்'னு பந்தயம் பத்து ரூபா கட்டியிருக்கான் போயி...''

பேசிக்கொண்டே கேட்டை நோக்கி ஓடியவனை வரதன் தடுத்து நிறுத்தினான்.

''நில்லுடா...யாரு, என்னது ஒரு விவரமும் தெரியல, அதுக்குள்ள தெருவுல டமாரம் அடிக்க ஓடறியா... நில்லு...கால் காசு கொடுக்காம ஸ்கூட்டர் திரும்பக் கிடைச்சதுக்கே அவனவன் வெந்துப் போகபோறான். இப்ப இந்த வெவரமெல்லாம் வேற தெரியணுமா? போடா உள்ள... சக்கு, பசங்களக் கூட்டிட்டு உள்ளார போ...நல்ல காலம் இன்னும் நல்லா விடியல...இல்லாட்டி இதுக்குள்ளாரவே மொத்த தெரு ஜனங்களும் நம்ம வீட்டுக்கு விசாரிக்க வந்திடுவாங்க...நீயும் உள்ள வாய்யா...காபி சாப்டுகிட்டே என்ன செய்யலாம்னு முடிவு எடுக்கலாம்...''

ஒரு அதட்டலோடு எல்லோரையும் உள்ளே கூட்டிச் சென்ற வரதன், கூடத்தில் ரகுபதியோடு உட்கார்ந்து கொண்டான். இருவரும் சகுந்தலா எடுத்து வந்த காபியை உறிஞ்சிக் கொண்டே தீவிரமாய் பேசினார்கள்.

''என்னய்யா நினைக்கறே நீ?''

ரகுபதி உதட்டைப் பிதுக்கினான்.

''தீர்மானமா சொல்றத்துக்குமுடியல...மொத்தத்துல இங்கிலீஷ் படம் பார்க்கிற மாதிரி இருக்கு...''

சகுந்தலா ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார, அவளுக்கும் பின்னால் பிள்ளைகள் நின்று கொண்டார்கள்.

''இந்த லெட்டரை நம்பலாமா, வேணாமா?'' பொதுப்படையாக வரதன் கேள்வி கேட்க, சகுந்தலா பதில் கூறினாள்.

''எனக்கென்னவோ உண்மையாவே வருத்தப்பட்டுத் தான் அந்த கடிதாசி யாரோ எழுதியிருக்காங்கனு படுது.'

ரகுபதி ஒரு தரம் செருமினான்.

''சினிமா சம்பந்தப்பட்ட குடும்பம்னா வசதியானவங்களா இருக்க மாட்டாங்களா? நம்ப வண்டியதான் திருட்டுத்தனமா எடுத்து உபயோகிக்கணுமா?''

''அதான் அவங்களே ஒத்துகிட்டு இருக்காங்களே, ஏதோ தலை போகிற அவசர வேலைனு...''

''இருந்தாலும்...'' சந்தேகம் தீராமல் இழுத்த ரகுபதியை கண்ணன் கத்தரித்தான்.

''தவறான காரியத்துக்காக ஸ்கூட்டரை உபயோகிச்சிருந்தார்னா நாளைக்குக் காலைல நம்ப வீட்டுக்கே வரேன்னு தைரியமா எழுதியிருப்பாரா மாமா?''

''அதுவும் சரிதான்'' என்றான் வரதன்.

''பெட்ரோல், என்னை ஃபுல்லா போட்டு, நாலு டிக்கெட் எடுத்து, போக வர செலவுக்கும் பணம் வச்சிருக்கார்னா, வசதியானவங்க மட்டுமில்ல, நேர்மையானவங்களும்தான்னு எனக்குத் தோணுது.'' சகுந்தலா அழுத்தமாய் தன் அபிப்ராயத்தை வெளியிட, வரதன் அதை ஆமோதித்து தலையாட்டினான்.



''அதுவும் பாரு சக்கு, நாம நாலு பேர்னு தெரிஞ்சு சரியா நாலு டிக்கெட் அனுப்பி வெச்சிருக்காங்க...ஒரு வேளை மெய்யாலுமே நமக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவங்கதானோ?''

''அப்படித்தானே லெட்டர்ல எழுதியிருக்காங்கப்பா...'' என்றான் ராஜா குறுக்கிட்டு

''யாராயிருக்கும்? சேதுபதி மாமா மகன் பாலாஜியா இருக்குமோ? அவன்தானே படவினியோகம் பண்ற கம்பனில மானேஜரா இருக்கான்?''

சகுந்தலா முகத்தை நொடித்தாள்.

''ஐயே, அந்தக் கஞ்ச மகாப்பிரபுவுக்கு டிக்கெட் எடுக்கவும். ஆட்டோ காசு கொடுக்கவும் மனசு வந்திடுமாக்கும்! வருஷத்துக்கொருதரம் அவங்க வீட்டுக்குப் போறப்பக்கூட 'காபி சாப்பிடறீங்களா?'னு வாயத் திறந்து புருஷனும் பொஞ்சாதியும் கேக்க மாட்டாங்க! நிச்சயமா அவர் இல்லைங்க!''

''பாலாஜி மாமாக்கு ஸ்கூட்டர் ஓட்டத் தெரியாதுப்பா...'உங்கப்பா தைரியசாலி, இந்த நெரிசல்ல ஓட்டறான். எனக்கு நினைச்சாலே கை உதறுது'னு போன மாசம் இங்க வந்தப்பக்கூட சொன்னாரு...'' கண்ணன் அம்மாவுக்கு ஆதரவாய் பேசினான்.

''வேற யாரு? உனக்கு ஏதாவது தோணுதாய்யா?''

நாடகம் ஒன்றைப் பார்க்கும் லயிப்புடன் அத்தனை

யும் கேட்டுக்கொண்டிருந்த ரகுபதி ''இல்லை'' என்றான் மெதுவாக.

''யாரா இருந்தா என்னங்க...அவங்க நாளைக் காலைல நேர வற்றப்போ தெரிஞ்சிடப்போகுது. அதுக்காக இப்ப மண்டயக் குழப்பிக்காதீங்க...''

கடிதத்தை மற்றுமொரு தரம் படித்த வரதன் ''இன்னிக்கு நாம படத்துக்குப் போய் வந்தாதான் அவங்க, நாளைக்கு வருவாங்க...அதை மறந்திடக் கூடாது'' அவனை முடிக்க விடாமல் சகுந்தலா தடுத்தாள்.

''நா மறக்கலீங்க...போயிட்டு வந்தா போவுது! கொலையா! குத்தமா!; எதுக்கு பயப்படணும்? புதுப்படம். பிள்ளைங்களுக்குப் பிடிக்கும்...போயிட்டு வர்றதுல என்ன தப்பு?''

கண்ணனும் ராஜாவும் இதுதான் தருணம் என்பது புரிந்து அப்பாவின் இரண்டு பக்கமும் மண்டியிட்டு கெஞ்சினார்கள்.

''அப்பா...ப்ளீஸ்...லேசுல கிடைக்காத அதிர்ஷ்டம் இது...போயிட்டு வந்திடலாம்ப்பா...''

வரதன் பெருமிதத்துடன் சிரித்தான்.

''இதுக்கு ஏன்டா இப்படி கெஞ்சறீங்க! எவனோ மகானுபாவன் சின்னதா எதையோ நம்மகிட்டேயிருந்து எடுத்துகிட்டு, பெரிசா ஒண்ணை பதிலுக்குத் தர முன் வந்திருக்கறப்போ, வேணாம்னு மறுக்க எனக்கென்ன பைத்தியமா! அவசியம் போவோம்...''

அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே இரண்டு



பையன்களும், கையைத் தட்டிக் கொண்டு சந்தோஷத்தோடு குதித்தார்கள்.

ரகுபதி எழுந்து நின்றான்.

அப்ப நா வரேன். எல்லாம் நல்ல விதமா முடிஞ்சிருச்சு, அதுவரைக்கும் சந்தோஷம்...''

வரதனும் கூடவே வாசல் வரை வந்தான்.

''நடந்ததெல்லாம் நமக்குள்ளேயே இருக்கட்டும்ய்யா சத்தியம் தியேட்டராண்டை ஸ்கூட்டர் அனாமத்தா நின்னுகிட்டு இருந்ததுனு சொல்லி போலீஸ் கொண்டு வந்து விட்டாங்கனு சொல்லிட்டா, தெருக்காரன் எவனும் நொணநொணனு மேக்கொண்டு தூண்டித் துருவ மாட்டான். நாளைக்கு போலீஸ்கிட்டயும், மத்தவங்ககிட்டயும் 'வீட்டு வாசல்ல விடிகாலைல வண்டி இருந்தது, மத்த எந்த வெவரமும் எங்களுக்குத் தெரியாது'னு சொல்லிடுவோம். என்னய்யா, நா தீர்மானம் செய்திருக்கறது சரிதானே?''

''ம்ம்'' என ரகுபதி படிகளில் இறங்கினான்.

''வீட்டுக்குப் போய் உன் பொண்டாட்டியையும் கூட்டிட்டு எழுமணிக்கு வரியாய்யா? தளபதி படம் போடப் போறேன்...காசு கொடுக்க வேணாம், சும்மா பாருங்க...'' என்றான் வரதன் தொடர்ந்து.

ஸ்கூட்டரிடம் நின்று அதன் ஸீட்டை ஒரு தரம் தட்டிக் கொடுத்தபின் ரகுபதி வீட்டுக்கு வந்தான்.

நண்பனின் விருப்பப்படி தங்கத்திடம் விவரம் எதையும் சொல்லாமல் 'போலீஸ் கொண்டு விட்டது. என்று மட்டும் கூறி, அலசரமாய் குளித்துத் தயாராகி'

கொஞ்சம் பழையதை சாப்பிட்டுவிட்டு மனைவி சகிதம் 'தளபதி' படம் பார்க்க வரதனின் வீட்டுக்குச் சென்றான்.

அதற்குள் வண்டி கிடைத்துவிட்ட விவரம் எப்படியோ தெரிய வர, வரதன் வீட்டில் நாலைந்து பேர்கள் கூடியிருந்தனர்.

மனசு இருந்த நிறைவான நிலையில் யாரிடமும் காசு வாங்கப் பிடிக்காமல் 'எல்லாருக்கும் 'இன்னிக்கு படம் இலவசமா காட்டப்போறேன்'' என்று அவன் அறிவித்து விட்டதில். பாதிப்படம் போனாலும் பரவாயில்லை என்று எட்டு மணிக்குள்கூடம் பூராவும் யார் யாரோடு ஆக்ரமித்துக் கொண்டார்கள்

எல்லோரும் உன்னிப்பாய் படத்தைப் ரசிக்கையில் சிகரெட் பிடிப்பதற்காக வராந்தாவுக்கு வரதன் எழுந்து போக, பின்னோடு ரகுபதியும் சென்றான்.

''சிகரெட் வேணுமாய்யா?''

''தங்கத்துக்கு தெரிஞ்சா திட்டுவா...அப்படி மரத்தடிக்கு மறைவா போயிடலாமா?''

இருவரும் அரை நிமிஷம் போல பேசாமல் நின்று சிகரெட் பிடித்தனர்.

''மாரி எங்க வரதா? நானும் நேத்திலேந்து கேக்கணும்னு நினைக்கறேன், மறந்திடுது...நேத்து வீடு அமர்க்களப்பட்டப்பவும் கண்ணுலேயே காணும். இப்ப படம் பாக்கற கூட்டத்திலேயும் ஆளைக் காணுமே?''

''கழுத கெட்டா குட்டிச்சுவர்! வேற எங்க போவான்? பொண்டாட்டி குழந்தைங்களப் பார்க்க ஊருக்குப் போயிருக்கான். நேத்துக் காலைல போனான். அனேகமா ராத்ரி வந்திடுவான். இல்லாட்டி நாளைக்காலைல நிச்சயம் திரும்பிடுவான்' ஒரு விதத்துல மாரி இப்ப இங்க இல்லாததுகூட நல்லதுக்குதான் இருந்திருந்தா, அத்தனையும் ஒண்ணு கெடக்க ஒண்ணு ஊர்ல மாமனார்கிட்டப் போயி உளறியிருப்பான். அப்புறம் அவங்களை சாமானப்படுத்தற வேலையும் சேர்ந்துகிட்டிருக்கும்!''



சிகரெட்டின் அடிபாகத்தைத் தரையில் போட்டு ரகுபதி மிதித்து அணைத்தான்.

''நடந்ததையெல்லாம் நினைச்சுப் பார்த்தா, நம்ப முடியாமத்தான் இருக்கு வரதா...போலீஸ்கிட்ட வண்டி கிடைச்ச விவரத்தையும், லெட்டர் பத்தியும் இன்னிக்கே சொல்லிடறது நல்லதோணுகூட ஒரோர் சமயம் தோணுது''

வரதன் தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரித்தான்.

''வீணா கவலைப்படாதேய்யா! எல்லாம் அய்யாவோட மச்சம் பண்ற வேலைனு நினைச்சு அதோட விட்டுடு என்ன!''

விட்டு விட்டான்.

படம் முடிந்து வீட்டுக்கு வந்து அரக்கப் பரக்க தங்கம் சமைத்துப் போட்டதை சாப்பிட்டுவிட்டு, படுத்து, உறங்கி, ஐந்து மணி போல எழுந்து, காபியுடன் வாசலுக்கு வரும்வரை சுத்தமாய் ரகுபதி நடந்ததை மறந்து போனான்.

ஆனால், ஐந்து நிமிஷங்கள் செல்வதற்குள் ஆட்டோ ஒன்று பின்னால் மெதுவாய் வர கண்ணன் சைக்கிளில் வருவதைக் கண்டதும், 'ஓஹோ, படத்துக்குப் புறப்படுகிறார்களா?' என்ற எண்ணமும், நடந்து போனவைகளும் தானாய் பூவைச் சுற்றும் வண்டாய் நெஞ்சில் சுழன்றன.

ஊர் உலகில் ஒவ்வொருநாளும் எத்தனையோ வண்டிகள் திருடு போகின்றன. அவற்றில் எத்தனை ஒழுங்காய், தூசி படாமல் திரும்பக் கிடைக்கின்றன? அப்படியே கிடைத்தாலும் எத்தனை வண்டியில் எண்ணெய், பெட்ரோல் நிரப்பித் தருகிறார்கள்? அட, அதைக்கூட செய்வதாக வைத்துக் கொண்டாலும் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாய் புதுப்பட டிக்கெட்டுகள், போக்குவரத்து செலவு என்று எவன் கொடுப்பான்? ஒன்று, ஸ்கூட்டரைத் திருடிக்கொண்டு போன ஆள் பைத்தியமாக இருக்க வேண்டும், அல்லது, வரதன் சொன்னது போல எல்லாம் மச்சத்தின் வேலையாய் இருக்கவேண்டும்.

ஆமாம், மச்சம் மச்சம் என்று அடிக்கடி பீற்றிக் கொள்கிறானே, அது உடம்பில் எங்கு இருந்தால் இப்படி வலிய அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும்? ஓஸியில் எல்லாவற்றையுமே அனுபவிப்பதற்கும் பூர்வஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டுமோ?

மெத்தப்படித்த பெரியவர் யாரிடமாவது விளக்கம் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தபடி உள்ளே போகத் திரும்பிய போது, ஆட்டோவில் தன் குடும்பத்தோடு சென்ற வரதன், இவனைப் பார்த்து கையசைத்து விட்டுப் போக,

சட்டென்று ரகுபதிக்குள் பொறாமை, ஆத்தாமை, ஏக்கம், இல்லாமை எல்லாம் ஒன்றாகத் திரண்டு அவன் மூச்சை முட்டச் செய்தன.

ஆனால், அந்த அவஸ்தை சரியாக அடுத்த நாலு மணித்துளிகளுக்கு மட்டுமே வரதன் குடும்பம் படம் விட்டுத் திரும்பி வந்து, திறந்து கிடந்த வீட்டையும், அலங்கோலமாகக் கிடந்த அறைகளையும் பார்த்து,



வெள்ளிப் பாத்திரங்கள், நகைகள், ஸ்கூட்டர், டேப்ரெகார்டர், டி.வி., வி.ஸி.ஆர்., மிக்ஸி என்று அனைத்தும் காணாமல் போய்விட்டது தெரிந்து வாசலுக்கு வந்து அலறும் வரையில் மட்டுமே உயிரோடு இருந்தது.

அப்புறம், வரதனின் நப்பாசை குணத்தையும், மாரி ஊரில் இல்லாததையும் தெரிந்து கொண்ட சாமர்த்திய சாலி ஒருவன் திட்டமிட்டு ஸ்கூட்டர் திருட்டு நாடகத்தை நடத்தியிருக்கிறான்; ஞாயிறு என்றால் அவரவர் வீட்டில் தெருக்காரர்கள் எவர் வீட்டில் எது நடந்தாலும் கவலைப் படாமல் தமிழ் சினிமாவைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்றும் கணக்குப் பண்ணி, டெம்போ ஒன்றைக் கொண்டு வந்து ஓசைப்படாமல் வெகு திறமையாக வீட்டை காலி பண்ணிக் கொண்டு போயிருக்கிறான் என்பதும் புரிந்த பிறகு வரதனை நினைத்து 'ஐயோ பாவம்' என்று மனப்பூர்வமாகப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு எதுவும் ரகுபதிக்கு சாத்தியம் இல்லாமல் போயிற்று.

முற்றும்

9527
3585418
கொளத்தூர், சென்னை